
# விஞ்ஞானமும் மெஞ்ஞானமும்



இ. சுப்பிரமணியம்.

உ

ஈழமணித்திரு நாட்டுக்கும்
எனை ஈன்றோர் திருவடிகளுக்கும்
இந்நூல்

# சமர்ப்பணம்

ரூபா: 15. 00

சிவமயம்



# ஆசிரியர். திரு. இ. சுப்பிரமணியம்.

## பாயிரம்

ஐயன்மீர்!

"பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்"

என்கிறது நன்னூல்.

அறிவிற் சிறியோனும் வயதில் முதியோனுமாகிய அடியேன் "விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் எனப் பெயர் கொண்ட இந்தநூலை எழுதுகிறேன். இதிற் காணும் குற்றங்களை மன்னித்து குணங்களையே எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

காப்புச் செய்யுள்களின் பின்னர், முதலாவதாக, நடராசர் துதியின்கீழ், பஞ்சகிருத்திய பொதுநடனக்காட்சி வருகிறது. ஐந்துசிறிய செய்யுள்களில், ஆனந்தநாடகனுகிய நடராசன் திருநடனமும், விஞ்ஞானிகள் ஆய்விற் கண்ட அணுநடனமும், ஒன்றே என்பது காட்டப்பட்டுள்ளது. ஆயிரம்கோடி அண்டங்களைக் கொண்ட பிரபஞ்சஉற்பத்தி பற்றிக் கூறப்படுகிறது. அடுத்து இந்துசமய மாண்பும் முதன்மைகளும் வருகின்றன. பின்னர் சமயங்களும் முரண்பாடுகளும் கூறப்படுகிறது இதில் இந்துக்களின் சகிப்புத் தன்மையும் சமரச மனப்பான்மையையும் காணமுடிகிறது.

சிவனுக்கு இணையான தெய்வம் இல்லை என்னும் விடயம் கிட்டனனும் அர்ச்சுணனும் பாசுபதம் பெறப்போன கதையில் இருந்து தெளிவாகிறது. இந்துக்கள் காலில்மிதிபடும் கல்லையும் வணங்குகிறார்கள் என்பது மறுக்கப்படுகிறது.

பிரபஞ்சம் தோன்ற மூலகாரணமான 'ஐதரசன்' அணுவின் புறத்தோற்றமே விபூதி என்பது தெளிவாக்கம் பெறுகிறது. சிவனும் அணுவும் ஒன்றென்பது பற்றிய செய்யுள்கள் வருகின்றன. ;செல்லப்பா சுவாமிகளும் யோகர் சுவாமியும் வருகிறார்கள். "வாளால் மகவரிந்து ஊட்ட வல்லன் அல்லேன்" என்கிறார் பட்டினத்தடிகள். மறுபிறப்பும் மனித உற்பத்தியும் சுயநலகற்பனை நரகலோகம்; அடியார்களின் உள்ளக்கமலங்களில் ஆண்டவன் குடியிருக்கிறான் என்பதையும் அறியுங்கள்.

அவதாரப் புருஷர்கள், கிட்ன பரமாத்மா, கிறிஸ்து பெருமான், திருவள்ளுவரும், தனிநாயக அடிகளும், ஸ்ரீராமபிரான், பகவான் இராமகிஷ்ணர், காந்திமகான்,பற்றிய கருத்துக்கள் வருகின்றன, வெள்ளைச்சாமிகள் நால்வர்களோடு உரையாடல், உலகவிடுதலை கிட்லரால் கிடைத்தது. களர்நிலம் விளைநிலமாக மாறுவதெப்படி? என்பது பற்றிய செய்யுள், சிவஞானபோத அத்துவிதம், பஞ்சாட்சரமந்திர மகிமை, கந்தபுராண சாரம், சமரச சன்மார்க்கம் என்னும் விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. "வாசியுங்கள் ஞானக்கருவூலத் திறவுகோல் இஃதே"

அன்பர்களே!

இதுகாறும் மர்மமாக இருந்து வந்த மெய்ஞான சிவநடனம், விஞ்ஞானிகளின் ஆய்வில் கண்ட அணுநடனத்தால் வெளிப்படையாவதைப் பாருங்கள், இந்துசமய மேன்மைகளை எடுத்துக் கூறுங்கள். இந்துக்களின் சித்தாந்த தத்துவம் இந்நூலில் இழையோடிக் கொண்டிருப்பதை அறியுங்கள்.

மேலும் இந்நூலை ஆராய்ந்து தங்கள் அணிந்துரைகளை அன்போடும் பண்போடும் நல்கிய அதிபர் யா/கோண்டாவில் இந்துமகாவித்தியாலய திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன் ) M.A அவர்கட்கும், வித்துவான் திரு. சி. குமாரசாமி முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அவர்கட்கும், இந்துநாகரீகத்துறை, யாழ் / பல்கலைக்கழக பேராசிரியர் பிரம்ம ஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கட்கும், யாழ் / வானியற்கழகதலைவரும், வழக்கறிஞருமான திரு. W.S. செந்தில்நாதன் B.A, Dip. in Ed, F.R.A.S அவர்கட்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரியன. தவிர,

இந்நூலை ஆய்ந்து அச்சுவாகன மேற்றி அரும்பணி புரிந்த யாழ்/ திரு. வே. புண்ணியமூர்த்தி (ஸ்ரீலக்ஷ்மிஅச்சக உரிமையாளர்) அவர்கட்கும், அவரின் பணியாளர்கட்கும், அச்சுப்பிரதிகளைப் பார்வையிட்டு அளப்பரும் உதவிகள் செய்த திருமலை திரு. சி. பெ. வரதராசன் அவர்கட்கும் எனது நன்றிகள். வணக்கம்.

இங்ஙனம்

அதிபர். இ. சுப்பிரமணியம்
ஆக்கியோன்.

விலாசம்:
39/5, இராசாவின்தோட்டம்வீதி,
பெரியவளவு
யாழ்ப்பாணம்.

டிசம்பர் 1988

# அணிந்துரை

பெரியார் சுப்பிரமணியம் அவர்கள் எண்பத்து நான்கு வயதுப் பிராயத்தைக் கடந்து கொண்டிருக்கிறார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களாலேயே பரமேசுவரக்கல்லூரிக்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இவர் பெரிதும் அநுபவம் மிக்கவர். ஆழ்ந்துசிந்திக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் சிந்தனைகள் பெரும்பாலும் இந்துசமயம் பற்றியே அமைவன. அவற்றை ஒழுங்குபடுத்தி தலைபபுகளும் தநதார். ஒவ்வொரு பொருள்பற்றியும் ஆழ்ந்த கருத்துக்கள் பிறந்தன. அவற்றையெல்லாம் தொகுத்து நூல்வடிவம் தந்தார். ஒவ்வொரு கட்டுரையும் இரத்தினச் சுருக்கமாகவே அமைந்து விளங்குகிறது. இதுதான் இந்நூல் உண்டான வரலாறு. அவர் தந்துள்ள விளக்கம் எளிய நடையில் அமைவதால் சிறுகுழந்தைகளுக்கும் தெளிவான விளக்கம் ஏற்படும்.

விஞ்ஞானம் மெஞ்ஞானம் சமயஅறிவு சாத்திரஅறிவு உலகியலறிவு ஆகியவை இக்கட்டுரைகளில் பரந்துகாணப் படுகின்றன. இவற்றை தமக்கே உரிய எளிய நடையில் உருவந்தந்து ஆக்கியுள்ளார். ஒருகட்டுரை அல்லது ஆகக் கூடியது மூன்று பக்கங்களுக்கு மேல் போகாதவாறு இந் நூலுக்கு வடிவந் தந்துள்ளார். இவர் கட்டுரையில் பொருட் செறிவு உண்டு; தெளிவு உண்டு; சிறு குழந்தைகளுக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் இவர் கட்டுரைகள் அமைந் துள்ளன. இவருக்கு கவிதை புனையும் ஆற்றலும் உண்டு என்பதை சில கட்டுரைகளில் ஆங்காங்கே வெளிப்படுத்தி யுள்ளார். இவருடைய யாப்புக்களாலமைந்த பாடல்களை இந்நூலிலேயே அங்கங்கே காணுகிறோம், அதிலும் கையாளப்படும் நடை சாதாரணமான நடை.

விஞ்ஞானமாயினும் சரி, மெஞ்ஞானமாயினும் சரி பரந்த உலகில் விளங்கும் சமய நூல்களில் விரிந்த கருத்துக் களாயினும் சரி இவ்வரிய நூல்களிலே உள்ள கருத்துக்கள் யாவையும் இந்து சமய நூல்களிலே காணலாம். என்ற உண்மையைக் கட்டுரைகளில் பல இடங்களில் தெளிவுபடுத் தியிருக்கிறார்.

கடவுள் வந்தாரா என்ற கட்டுரை நாற்பத்தோராம்பக்கத்தில் அமைந்துள்ளது. சிந்தனையைக் கிளறும் வண்ணம் அமைந்த இக் கட்டுரை 'கிண்டல்' செய்யும் வகையில் மக்களுக்கு அறிவூட்டி உண்மைகளை இடித்துரைக்கிறது.

'அனல் ஆடும் சிவன்' என்ற கட்டுரையிலும், 'திரு நடனம் அணுநடனம்' என்ற கட்டுரையிலும், விஞ்ஞானத்தின் ஆய்வுகளின் விளைவுகளை எல்லாம் மிகச்சுருக்கமாகவும் அழகாகவும் தெளிவாகவும் சைவ சமய உண்மைகளுடன் இணைத்துத் தொடர்பு படுத்திக்காட்டும் அழகே தனிஅழகு.

பலசமயங்களைப் பற்றிப் பற்பல குறிப்புக்களை இச் சிறு நூல் முழுவதும் வழங்கியிருப்பினும் அவற்றைத் தாக்ச முற்படாது அவற்றின் நற்குணநலன்களை எடுத்துக்கூறி சமரசம் ஓங்கி நிற்பதையே சுட்டிக்காட்டியுள்ளார்கள். சமரச சன்மார்க்கம் என்பதே இந்நூலின் இறுதிக் கட்டுரையாக அமைந்து இந்நூலின் நோக்கம் இதே என்பதை வற்புறுத்துவதாக அமைந்துள்ளது. இவரது வயது முதிர்ச்சி, அநுபவ முதிர்ச்சி என்பனவே இந்துசமயத்தில் காணப்படும் சமரச மனப்பான்மையைக் கட்டுரைகளில் பொருத்தி விளங்க வைக்கின்றன எனலாம்.

இனியநடையிலமைந்த இந்நூல் நவீன சிந்தனை வழி நிற்கும் பல்கலைக்கழக மாணவருட்பட எல்லோரும் படித்துப் பயன் படவேண்டிய நூல். இதில் இருக்கும் கருத்துக்கள் சிந்தனையைக் கிளறி அவ்வவ்விஷயங்கள் பற்றி மேன்மேலும் சிந்திக்கத் தூண்டுவன.

இந்நூலாசிரியர் நீண்ட ஆயுள் பெற்று நெடுநாள் வாழ்ந்து இனிது விளங்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

இந்துநாகரீகத்துறை — கா. கைலாசநாதக்குருக்கள்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம். 2-1-1989

# ஆசியுரை

இந்தச் சிறியநூலை வாசித்து மகிழ்ச்சி அடைகிறேன். விஞ்ஞான அணுநடனம் இந்து சமயத்துக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும். பிறமதஇருள் அகற்றும் ஞான சூரியன் இது என்பதே எனது முடிவான கருத்தாகும்.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் இ. சுப்பிரமணியம் என்பவர் முன்னாள் நெடுந்தீவு கிராமசபைத் தலைவர்; ஒரு கவிஞர்; முன்னாள் உயர்நீதிமன்றயூரர் என்பதை அறிகிறேன். அவர் பல்லாண்டு வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

இப்படிக்கு
W. S. செந்தில்நாதன்
B. A., Dip. in Ed., F. R. A. S.
வழக்கறிஞர்.
தலைவர், யாழ் வானியற் கழகம்.

*10-1-1989*

# அணிந்துரை

''மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்'' என்பது முதுமொழி, எண்பத்துநான்கு வயதுகள் நிறைவு பெற்றுக் கொண்டிருக்கும் பெரியார் சுப்பிரமணியம் அவர்கள் தமது சமய அநுபவங்களையும், கற்றும் கேட்டும் உணர்ந்தவற்றையும் தெளிந்த அறிவோடு சிறுச்சிறு கட்டுரைகளாய் அமைத்துத்தந்துள்ள ''இந்து சமய அநுபவக் களஞ்சியம்'' போன்ற இந்நூலின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் இன்றைய பரம்பரையினால் அமிர்தம் எனவே கொள்ளக்தக்கன, எத்தகைய அமிர்தம்? இந்து சமயம் என்னும் பாற்கடலிலே கடைந்தெடுத்த தேவாமிர்தம் எனலே தகும்.

இந்துசமய மெய்ஞ்ஞானத்தை இன்றைய விஞ்ஞானத்தோடு ஒப்புநோக்கி உண்மை விளக்கம் தர இவ்வாசிரியர் முற்படுவது பாராட்டத்தக்கதாகும். இம்முயற்சியில் முன்னரும் அறிஞர் சிலர் ஈடுபட்டுத் தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். எனினும் மறக்கப்பட்டுவரும் அவ்வுண்மைகளை மீண்டும் மீண்டும் நினைவூட்டுதலும் வேண்டுவதே. இவ்வகையில் பெரியார் சுப்பிரமணியம் அவர்களது முயற்சி வியந்தோதத்தக்கதே. கிட்ணபரமாத்மாவே கிட்லர் பரமாத்மாவாக அவதாரம் எடுத்து இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கதாநாயகனாக விளங்கினார் என்ற இவரது மற்றொரு கருத்து மிகவும் புதுமையும் சிந்தனையைத் தூண்டுவதாயும் உள்ளது.

இவற்றோடு இந்துசமய சாத்திர தோத்திர நூல்கள் பற்றியும், இந்துசமய அடியார்கள், ஞானிகள் பற்றியும் இரத்தினச் சுருக்கமாக இவர் எழுதியுள்ளமை பயன்மிக்கதொரு பணி.

ஆக, பல்லாற்றானும் பயன் மிகுந்த இந் நூலினைத் தமது முதிர்ந்த பராயத்தில் எழுதி வெளியிட்டு எம்மவருக்கு வழிகாட்டும் பெரியாரவர்களின் நன்றி காலத்தினாற் செய்ததாதலின் அதனை ஞாலத்தின் மாணப் பெரிதாகக் கொண்டு போற்றுவோமாக.

( க. சொக்கலிங்கம் (சொக்கன்) M. A., S. L. E. A. S.
(அதிபர் யா. / கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)

# விஞ்ஞானமும் மெஞ்ஞானமும்

"சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை" என்று இறைவனைப் போற்றுகின்றது தேவாரம், "சிந்தனை நின் தனக் காக்கி" எனவும் "வாக்குன் மணிவார்த்தைக் காக்கி" எனவும் தொழுது நிற்கின்றார் மணிவாசகப் பெருமான், கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என முதலாம் அதிகாரத்திலேயே அறிவுறுத்தி வைக்கின்றது திருக்குறள்.

"யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
நாமேல் நடவீர்"

என்கின்றார் அருணகிரிநாதர்

"கற்பனவும் இனி அமையும்" என விட்டுவிடாது ஓய்வுபெற்ற பின்னும் தொடர்ந்து தாம் கற்ற கல்வியும், பெற்ற அநுபவ முதிர்ச்சியும், இவற்றால் தமது சிந்தனையினூறிய சீரிய கருத்துக்களும் பிறருக்கும் பயன்பட வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் இந்நூலை யாத்துள்ளார் பெரியார் இ. சுப்பிரமணியம் அவர்கள். தனித்தனி கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. ஆங்கிலப் புலமையும் வாய்ந்தவராதலின் இன்றைய விஞ்ஞான மேதைகளின் ஆய்வு முடிபுகளைச் சைவ சித்தாந்தம் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்த உண்மைகளோடு தொடர்புபடுத்தி சைவத்தின் மேன்மையைப் புலப்படுத்துகின்றார். அத்துவிதம் என்பதற்கு புதிய விளக்கமும் கொடுக்க முனைகின்றார். "சிவநடனம் அணுநடனமே" எனக் கொடுக்கும் விளக்கம் சிந்திக்கத்தக்கது.

இந்துக்களின் பல தெய்வ வணக்கம், பல்வேறு வகைப்பட்ட உருவச் சிலைகளின் வணக்கம், உணவுப் பொருள்களின் நிவேதனம், மனைவியுடன் இணைந்த தெய்வ வணக்கம் என்பன பற்றிப் பரிகசிக்கும் பிற மதத்தினரின் மடமையைச் சாடுகின்றது ஒரு கட்டுரை. ஆயினும் பிற

மதக் காழ்ப்பு இன்றிச் சமய சமரசம் நூல் முழுவதிலும் இழையோடிக் கொண்டிருப்பது, காய்தல் உவத்தல் இன்றி ஆயும் ஆசிரியரது பரந்த உள்ளத்தைக் காட்டி நிற்கின்றது, மதம் காரணமாக எழும் பூசல்கள் நீங்கின் உலக சமாதானம் ஏற்படும் எனச் சமரச சன்மார்க்கம் என்ற இறுதிக் கட்டுரையில் எடுத்துக் காட்டி வேண்டுகோள் விடுப்பது பெரியார் அவர்கள் இந் நூலை யாத்ததன் குறிக்கோள் இன்னதென நன்கு புலப்படுத்துகின்றது.

சமய தத்துவங்கள் வேதகாலத்திலிருந்து இன்றுவரை வாதப் பிரதிவாதங்களுக்கு இடந்தந்து கொண்டிருக்கின்றன. ஆதலின் ஆசிரியர் கூறுஞ் சிலகருத்துக்களும் சிலரது வாதத்திற்கு இடமளிப்பின் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இந்துசமயம் என்பது வெறுந் தத்துவம் மாத்திரமன்று. அது வாழ்க்கைநெறி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நெறி எனக் காட்டி நிற்கின்றன கட்டுரைகள்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் அவர்கள் நம் தமிழ் நாட்டுப் பொருளாதாரம் பற்றியும் சிந்திக்கின்றார். "நெடுந்தீவு நலம்பெற" என அவர் யாத்துள்ள கவிதை மதில் கட்டுங்கள் என ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கூறுகின்றது.

இனிய இலகுவான மொழிநடை கைவந்தவர் ஆசிரியர். இதனைக் கட்டுரைகளிலும், கவிதைகளிலும் கண்டின்புற முடிகின்றது, இறை சிந்தனை குறைந்து கொண்டுவரும் இக் காலகட்டத்தில் அந் நோய்க்கு அருமருந்தாக இந் நூலை ஆக்கித்தந்துள்ள ஆசிரியருக்குத் தமிழ் உலகமும் சைவ உலகமும் நன்றிக் கடப்பாடு பூண்டுள்ளன.

ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழவும் தமது அநுபவ ஞானத்தை நூல்களாக்கி அளிக்கவும் இறைவன் திருவருளை வேண்டி நிற்போமாக.

**வித்துவான் சி. குமாரசாமி**
முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்.

# நடராசர் துதி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்றபூங்கழல் போற்றிபோற்றி
(கந்தபுராணம்)

# பஞ்ச கிருத்திய பொது நடனக் காட்சி

1) ஐதரசன் அணு ஒன்று இரண்டாகி
ஆடல் புரியுது பார் -விஞ்ஞானி
ஆய்ந்த அணுஞானம் இந்து மெய்ஞானத்துக்(கு
ஆதாரம் காட்டுது பார்

2) 'புரோட்டோன்' 'இலெக்ரோன்' எனும்இருசக்திகள்
நாடகம் ஆடுது பார் -அவை
பாரிய தாரகை யாக மிளிர்வதை
பூதக் கண்ணாடியிற் பார்

3) அழுத்த அணுவால் உருவான தாரகை
அக்கினிக் கோளம் என்ன
எரியுது பார்! அதுவெடித்துச் சிதறவே
அனைத்தும் உண்டாகுது பார்

4) இந்த இருநடம் என்றும் நடக்குது
அம்மை அப்பனாய் நின்றாடும் - நம்
ஈசன் சிதம்பர நடேசனைப் பார் - சக்தி
ஈஸ்வரி ஆடலைப் பார்

5) விஞ்ஞான மேதைகள் ஆய்விலே கண்டு
விளம்பும் அணு நடனம் - இந்து
மெஞ்ஞான மேன்மையை வையகம் போற்றிட
வந்த திருநடனம்' (இசு)

# காப்பு

## விநாயகர் துதி

பொங்கும் அமுதும் சர்க்கரை பாலுடன் மோதகமும்
தங்கும் உதர தவமணியே அன்பர் துதிமணியே
சங்கம் பரவுந் தமிழினை அன்புடன் தந்தருளிப்
பங்கம் வாரா தென்னைப் பார்த்திடு சித்தி விநாயகமே.

## வாணி துதி

கம்பர் பெருமானுக் கன்றே உனது கனகமணி
அம்பொற் சிலம்பொன் றளித்தே அவன் இடர் களைந்தாய்
நம்பும் அடியேனைக் கார் என்று கூவி நலிந்தழைத்தால்
பின்பென்று மவுனம் பூணுவையோ எனைபெற்றவளே.

## முருகன் துதி

நீ கொடுத்த நல்வரத்தால் அகத்தியனும் தமிழ்வளர்த்தான்
வேலெடுத்து வானவர் தம் சிறைமீட்ட தமிழ் அழகா
கோலெடுத்தேன் நூல் எழுதக் கருணைதர மாட்டாயா
கால் பிடித்து வேண்டுகின்றேன் சகலகலா பண்டிதனே.

★

# விஞ்ஞானமும் மெஞ்ஞானமும்

## பிரபஞ்ச உற்பத்தி

பிரபஞ்சம் என்றால் என்ன? இந்தப்பூமியும் இதற்கு அப்பால் உள்ள சர்வலோகங்களும் அவற்றில் உள்ள அண்ட சராசரங்கள் அனைத்தும் அடங்கியதே பிரபஞ்சம் எனப்படும்

இந்த பிரபஞ்சம் அணுவினால் ஆனது, இயங்குகின்றது என்று இக்கால விஞ்ஞான மேதைகள் அறிக்கை விடுகின்றனர்.

அணு என்பது யாது? அது தான் இறைவனின் மறு பெயர் என்கின்றனர் இந்து சமயஞானிகள். "ஐயா 'போற்றி அணுவே போற்றி" என்கிறார் மாணிக்கவாசகர் 'அரியானை............ என்று தொடங்கும் தேவாரத்தில் 'அணுவை யார்க்குந் தெரியாத தத்துவனை......என்கிறார். அப்பரடிகள். இவற்றால் இறைவன் அணுவாக இருக்கின்றான் என்பது தெளிவாகிறது. இதுதான் இந்துக்களின் கொள்கை.

## ஆயிரம் கோடி அண்டங்கள்

ஆயிரம் கோடி அண்டங்கள் உண்டென இந்துபுராணங்கள் கூறுகின்றன. இக் கால விஞ்ஞானியும் இதனை ஒத்துக் கொள்கிறான். பிரமாண்டமான அண்டவெளியில் அங்கும் இங்கும் எங்குமாகப் பறந்து திரியும் சாம்பல்நிறமான தூசியை 'ஐதரசன்' அணுவென்கின்றனர் விஞ்ஞானிகள். இதுதான் பிரபஞ்ச உற்பத்திக்கு காரணம் என்கிறார்கள் அவர்கள். பாரிய றேடியோ தொலைநோக்கிகளைக் கொண்டு ஒளியின் வேகத்தை அளவு கருவியாக வைத்து வானவெளியை அளந்து ஆயிரம் கோடி அண்டங்கள் பிரபஞ்சத்தில் உண்டு என்பதை அறிக்கை இடுகின்றனர் விஞ்ஞானிகள். இனி,

சிவனை அணுவென்று எங்கள் நாயன்மார் கூறுவதை மேலே சொன்னோம். கருணாமூர்த்தியாகிய சிவபெருமான், ஆன்ம கோடிகளில் கொண்ட கருணையினால் தானும் சக்தியும் என இருகூறாகி நின்று ஆடும் பிரபஞ்ச நடனமே பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணம் என்பது இந்துக்களின் கொள்கை. இனி 'ஐதரசன்' அணுவே பிரபஞ்ச உற்பத்திக்குக் மூலகாரணம் என்று சொல்லும் விஞ்ஞானியின் விளக்கத்தை மேலே காண்போம். HYDROGEN 'ஐதரசன்' அணுவுக்குள் அணுவாக இரண்டு மின்கூறுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று சகமின்கூறு மற்றது சயமின் கூறு. இவற்றை ஆங்கிலத்தில் புரொட்டோன் என்றும் இலக்ரோன் என்றும் அழைப்பர். இவை ஒன்றை ஒன்று கவர்ந்து இழுப்பது மின் இயல்பு. இந்தக் கவர்ச்சியினால் பலகோடி ஐதரசன் அணுக்கள் ஒன்றுகூடி திரழுகின்றன. மேலும் மேலும் பலகோடி அணுக்கள் சேர்ந்து நெருக்கும் போது அழுத்தம் உண்டாகிறது. அதனால் ஒருநட்சத்திரம் உருவாகிறது. இது உருவாக பலகோடிவருடங்கள் எடுக்கும்.

தொடர்ந்து ஏற்படும் கவர்ச்சியாலும் அழுத்தத்தாலும் சூரியனிலும் பன்மடங்கு பெரிய நட்சத்திரம் காட்சி தருகிறது. இந்தநிலையில் முன்சொன்ன மின்கூறுகள் புரொட்டோன், இலெற்ரோன் வேகமாக ஆடத்தொடங்க நட்சத்திரத்தில் ரசாயன மாற்றம் ஏற்றடுபகிறது.

இதன் காரணமாக ஆரம்பத்தில் ஹேலியம் (Helium) என்ற வாயுவும் அதன்பின் காபன், ஒட்சிசன், நைற்றசன் முதலான வாயுக்களும், அதன்பின் இரும்பு, தங்கம், வெள்ளி முதலான உலோகப்பொருட்களும் நூற்றுக்கும் அதிகமான தனிப்பொருட்களும் பிரபஞ்சத்தில் உயிர்வாழ்வுக்கு ஆதாரமான எல்லாப் பொருட்களும் நட்சத்திரத்தில் உண்டாகின்றன.

ஈற்றில் பலகோடி அனலில் அந்த நட்சத்திரம் ஒரு அக்கினிக் கோளமாக எரியும்போது அதுவெடித்துப் பயங்கரமான சத்தத்துடன் நாலா பக்கமும் சிதறுகிறது.

நாம் காணும் சூரியனும், கிரகங்களும், சந்திரனும் பூமியும் ஒரு பிரமாண்டமான நட்சத்திரத்தின் சிதறல்கள் தான் என்கின்றனர் விஞ்ஞானிகள். மேற்கூறியபடி பாரிய நட்சத்திரங்கள் தோன்றிவெடித்துச் சிதறுவதால் பிரபஞ்சம் உண்டாகிறதென்பது விஞ்ஞானிகள் துணிபு.

ஐதரசன் அணுவின் ஆட்டத்திஞல் அகிலமும் உண்டாகிறது என்னும் விஞ்ஞானிகள் கொள்கையும்; அப்பனும் அம்மையும் ஆகிநின்று புரியும் ஆனந்தநடனம் பற்றிய இந்துக்களின் கொள்கையும் ஒன்றே என்பது வெளிப்படையாகிறது.

மேலும் புதிய புதிய நட்சத்திரங்கள் தோற்றுவதையும் சிலநட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுவதையும் வானசாஸ்திரிகள் கண்டுபிடித்து அறிக்கை விடுகின்றனர். விஞ்ஞான விந்தைகள் கொஞ்சமா நஞ்சமா?

## இந்து சமயம்

இந்து சமயம் இயற்கையாகத் தோன்றியது. தனி மனிதஞல் சிருட்டிக்கப்படவில்லை. இதனைச் சஞதன தர்மம் என்றனர் அறிஞர்கள். சகல மதங்களுக்கும்தாய் இதுதான்; ஆதியில் இந்துக்கள் இயற்கையில் தெய்வத்தைக் கண்டார்கள். சூரியன், சந்திரன், கிரகங்கள், தீ, காற்று, மலை, மரங்கள், ஏன் அறுகம்புல்லில் கூட தெய்வத்தைக் கண்டார்கள். பசுவின் சாணத்தைத் திரட்டி அதில் அறுகம் புல்லைக்குத்தி விநாயக வணக்கம் செய்கிருர்கள். இதன் அர்த்தம் யாது? இறைவன் இயற்கையில் கலந்திருக்கிருள் என்பது தான். இது ஒரு சிறப்பான அத்துவித சைவசித்

தாந்தமாகும். இதன் பொருள் என்ன? கடவுள் பிரபஞ்சப் பொருட்களில் கலந்திருக்கிறன். அதேவேளை புறம்பாகவும் இருக்கிறன் என்பதே. பிரபஞ்சம் கடவுள் அல்ல, கடவுளுக்கு வேறனதுமல்ல என்பதுதான் புனிதமான அத்துவித சித்தாந்தமாகும்.

இந்த உண்மையை "அரியானை என்று தொடங்கும் தேவாரததில் அப்பரடிகள்; "கரியானை, நான்முகனை, கனலை காற்றை, கனைகடலை, குலவரையைக் கலந்து நின்ற பெரியானை" — என்று இறைவனைப் போற்றுவதன் மூலம் புலப் படுத்துகின்றர். கரியநிறமுடைய திருமாலிலும், பிரமனிலும் கூட இறைவன் கலந்திருக்கிறன். இதுதான் அத்துவித தத்துவம்.

மேலும் பிரபஞ்சஉற்பத்தியின் பொருட்டுச் சிவனும் சக்தியும் பஞ்சகிருத்திய நடனம் செய்கிறர்கள் என்பதை இந்துக்கள் எப்படிக் கண்டு கொண்டார்கள் என்பது ஒரு நியாயமான கேள்விதான். இந்தியா ஒரு ஞான பூமி என்பது எல்லார்க்கும் தெரியும். இங்கு தான் அட்டமா சித்திகளைப் பெற்ற முனிவர்கள், சிவயோகிகள், சித்தர்கள் வாழ்ந்தார்கள் என்பது வரலாறு. இவர்கள் தங்கள் ஞான திருஷ்டியினுல் ஆயிரகோடி அண்டங்களைப் பற்றிய மர்மங்களைக் கண்டு சொன்னர்கள்.

இக்கால வான விஞ்ஞானிகளும் அணு விஞ்ஞானிகளும் தொலைநோக்கிக் கருவிகளின் உதவியோடும் அணு ஆய்வு பரீட்சைகள் மூலமாகவும் இந்து ஞானிகள் கண்டனவற்றை சரியென்று ஆமோதிக்கிறர்கள்.

**வாழ்க இந்து சமயம்!**
**வாழ்க விஞ்ஞானம்!**

# சமயங்களும் முரண் பாடுகளும்

ஆதியில் இந்து சமயம் தான் உலகெங்கும் பரவலாகப் போற்றப் பட்டு வந்தது என்பதனைப் பிரபல ஆராயச்சி ஆளரான திரு' ஒக்' என்ற இந்தியர் கூறுகிறார் இடையில் எழுந்த சில புறச்சமயங்கள் அதற்குப் பங்கம் விளைத்தன என்கிறார் அவர்.

அவற்றுள் இற்றைக்கு 2500 ஆண்டுகளின் முன் இந்தியாவில் தோன்றிய புத்தமதமும் ஒன்றாகும். இந்தியாவில் கபில வஸ்து என்னும் நகரத்தில் வாழ்ந்த சித்தார்த்தன் என்னும் இராசகுமாரன் தனது அரச பதவியைத் துறந்து இந்து சந்நியாசி ஆனன் இடையில் இந்து சமயத்தைக் கைவிட்டுப் புத்தர் என்ற பெயரோடு இறைவன் இல்லை என்ற நாஸ்திகக் கொள்கையோடு, தர்மம் ஒன்றே (நிர்வாணம்) முத்தியைத்தரும் என்று போதித்தார், ஒரு சங்கத்தையும் உண்டாக்கினார்.

அவரைப்பின்பற்றிய இந்தியா முழுவதும் புத்தசமயத்தைத் தழுவியது பின்னர் ஆழ்வார்கள் நாயன் மார்களும் ஆதிசங்கரர் போன்றவர்களும் தோன்றிக்கடவுட் கொள்கையை நிலை நாட்டவே புத்த சமயம் இருந்த இடந் தெரியாமல் மறைந்தது திருஞானசம்பந்தர் தமது பதிகங்கள் தோறும் சமண, பௌத்த மதங்களைக் கண்டிக்கின்றார்.

வதாவூரடிகள் என்னும் மாணிக்க வாசக சுவாமிகள் வாதஞ் செய்து புத்த சமயத்தைக் கண்டித் தவருள் முதன்மையானவர் அதனை.

மருவாத நெறிபூண்ட மத்தன் எனும் புத்தனுடன்
பொரு வாதில் வென்று சிவன் பெருநாமமே வளர
ஒருவாத பிறவியில் சென்று ஒருநாமம் உறுதவற்குத்
திருவாத வூரரெனும் திருநாமம் தரித்தார்கள் என்கிறது.

— வாதவூர்ப் புராணம்

இந்தியாவில் மறைந்த புத்த சமயம் சீனு, திபேத், யப்பான் இலங்கை முதலிய நாடுகட்கும் பரவி இந்து சமயத்துக்கு இடையூறு விளைத்தது.

இனி இந்து சமயத்துக்கு இடையூருக வந்த சில புறச்சமயங்கள் மேலை நாடுகளில் தோன்றின பொருளாதார முன்னேற்றம் அடைந்த அந்த நாடுகள், துப்பாக்கி முனையில் கீழைத்தேச நாடுகளையும் பிடித்துத்தங்கள் மதங்களைப் பரப்பின மத்திய கிழக்கில் உள்ள சில நாடுகளும் தங்கள் ஆயுத பலத்தால் இந்து சமயத்துக்குத்தீங்கு விளைத்தன, தங்கள் மதங்களைப் பரப்பின.

பிரபஞ்ச உற்பத்திக்கு முரண்பாடான சிலரின் கொள்கைகளை விஞ்ஞானிகள் சாடுகின்றனர்.

ஆதியில் சர்வேசுரன் வானத்தையும் பூமியையும் சகலத்தையும் படைத்து ஏழாம்நாள் ஓய்ந்திருந்தார் என்பதற்கு எதிராக பஞ்சகிருத்தியம் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அணுஓய்வு எடுப்பதில்லை என்கின்ருன் விஞ்ஞானி. பேரறிஞரான கம்பரும் படைத்தல், காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் எம்பெருமான் விளையாட்டாக எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிருன் என்கிருர்.

**உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட்டுடையார், அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே என்கிருர்**

மேலும் மனிதனைப் பிசு பிசுத்த களிமண்ணுற் படைத் சருவேசுரன் அவனுடைய விலாஎலும்பை முறித்து அதில் இருந்து ஒரு அழகான மனைவியையும் படைத்து அவர்க

னுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டையும் விதித்தார் என்றும், அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை மீறியதால் அவர்களுக்கும், அவர்கள் பிள்ளை குட்டி சந்தானம் எல்லாம் மரணத்தை அடைவார்கள் என்று சபித்தார் என்றும், அவர் இட்ட சாபத்தினுல் தான் மனிதர் எல்லாம் இறக்கிருர்கள் என்றும் சொல்லப்படுவதை விஞ்ஞானிகள் ஆட்சேபிக்கிருர்கள்.

அப்படியானுல் உலகில் உள்ள எண்பத்துநான்கு நூருயிரம்கோடி சீவராகசிளும் பிறந்து, வாழ்ந்து நாள்தோறும் இறக்கின்றனவே. இதற்கு அந்த அப்பாவிப் பிராணிகள் எந்தக் குடும்பக் கட்டுப்பாட்டை மீறின என்று கேட்கின்றனர். மேலும் தந்தை தாய் செய்த குற்றத்துக்காக அவர்களின் சந்தானம் முழுவதையும் தொடர்ந்து அழித்து வருவது நீதியா? உலகில் கொடுங்கோல் மன்னர்கள் கூட இப்படியொரு தண்டனையை விதிக்கமாட்டார்களே என்று இப்படியான முரன்பாடுகளைச் சுட்டுசின்றனர்.

இதனைக் கேட்டு சகிக்காத சிலர் இந்து சமயிகளை நேரடியாகவும், வானெலி மூலமும் சாடுகின்றனர். "இந்துக்கள் பல தெய்வங்களை வணங்குகிருர்கள்; இறைவனுக்கு இணை வைக்கிருர்கள்; காலில் மிதிபடும் கல்லையும் வணங்கிருர்கள்;" என்கின்றனர்.

ஆனுல் இந்துக்கள் புறமதங்களைச் சாடுவதில்லை எந்தப் புறச்சமயத்தில் எவ்வளவு முரண் பாடுகள் இருந்தாலும், எல்லா மதங்களும் சமம் என்றும், எல்லா நதிகளும் கடலில் சங்கமம் ஆவதுபோல, ஈற்றில் இறைவனையே சேருகின்றன என்னும் சமய சமரச ஞானம் படைத்தவர்கள் இந்துக்கள். அவர்களின் சகிப்புத் தன்மையும், பரந்த மனப்பான்மையுமே சமய வளர்ச்சிக்குத் தடைகள் பல தோன்றிய போதிலும் அவற்றை வென்று இந்துமதம் வளர்ந்து கொண்டிருப்பதற்குக்காரணமாகும்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகஞர் தாம் வருவர்'' என்ற மேலான கொள்கையால் இந்துக்கள் புறச் சமயங்களோடு முரண்படுவதில்லை மதப்போர் புரிவதில்லை, போட்டி போட்டு மதப் பிரசாரம் செய்வதில்லை, மத மாற்றம் செய்யப் போவதும் இல்லை.

இந்துக்கள் பல தெய்வங்களை வணங்குவதில்லை இறைவனுக்கு இணை வைப்பதும் இல்லை காலில் மிதிபடும் கல்லைத்தொழுவதும் இல்லை இந்து சமயத்தை நன்கு! ஆராயாதவர்களே அதைச் சாடுகிருர்கள். அவர்களின் தாக்குதல்கள் அர்த்தம் அற்றவை என்பதை ஒரு புறச்சமயியும், முன்ஞன் தமிழ் நாட்டு பிரதம நீதி அரசருமான மாண்புமிகு இஸ்மெயில் அவர்களே மகாபாரதத்தில் மேற்கோள் காட்டுகின்ருர் பாருங்கள்.

## கிட்னரும் அருச்சுனனும் பாசுபதம் பெறப்போன கதை

கிட்னரும் அருச்சுனனும் பாரதப் போரை வெல்வதற்காக, கயிலைப் பெரிய வரிடம் பாசுபதம் பெறப்புறப்'' படுகிருர்கள். போகும் வழியில் ஒரு வனந்தரம், அருச்சுனன் தினமும் சிவபூசை செய்து முடிந்த பின் தான் பிறகமருங்களைப் பார்ப்பது வழக்கம் அந்த வனந்தரத்தில்,, கோவில் குளமோ, பத்திர புஷ்பமோ கிடையாது. அருச்சுனன் தயங்கு வதைக் கண்ட கிட்னர்: ''மைத்துன, நான் தரையில் இருக்கிறேன், எனக்குப் பூசைசெய்'' என்ருன் அருச்சுனன் ஒருவாறு சம்மதித்து, பக்கத்தில் உள்ள புதர்ப் பூக்களில் ஐந்தை எடுத்துக் கிட்னரின் பாதங்களிற போட்டுத் தன் பூசையை முடித்தான். பின்பு இருவரும் கயிலைக்குச் சென்று கயிலாய நாதனை வணங்கும் போது, முன்குறிப்

பிட்ட ஐந்து புதர்ப் பூக்களும் அவருடைய திருவடியில் கிடக்கக் கண்டு அதிசயித்தார்கள் என்பதுவே பிரதம நீதியரசர் காட்டிய மேற்கோளாகும் (ஆதாரம் கலைமகள் சஞ்சிகை)

இக்கதையின் அர்த்தம் என்ன? எந்தத்தெய்வத்தை வழிபட்டாலும் அந்த வழிபாடு சிவனையே சாரும் என்பதாகும்.

எனவே இந்துக்கள் பலதெய்வங்களைத் தொழுவதில்லை என்பதும் சிவனுக்கு இணை வைப்பதில்லை. என்பதும் தெளிவாகிறது. தவிர, பிரம விட்ணுக்களும் சிவனின் ஆணை வழியே நிற்பவர் என்பதும் அருத்தாமத்தியாக விளங்குவதையும் குறிப்பிடலாம்.

## காலில் மிதிபடும் கல்

"இந்து சமயிகள் காலில் மிதிபடும் கல்லையும் வணங்குகிறார்கள்" என்ற இந்தப் பேச்சு, பேசுவோரின் அறியாமையைக் காட்டுகிறது, "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" நிற்கும் கடவுளின் வல்லமையை அறியாதவரின் பேச்சே இது.

"என்னுடைய இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்" என்றான் ஐந்து வயதுப் பாலகன் பிரகலாதன்; தந்தையான இரணியனுக்குத் தான் சொன்னதை நிருபித்துக் காட்டியும் விட்டான். இந்தச் சிறுவனுடைய இறைதத்துவம் இவர்களுக்கு இல்லையே என்பது கவலைக்குரியதே. இந்துக்கள் இயற்கையில் தெய்வத்தைக் காண்பவர்கள் என்பதை யாம் முன்னர் கூறிவிட்டோம்.

இந்துக்கள் தாங்கள் வழிபடும் மூர்த்திகளின் சூக்குமமான அதாவது அரூபமான திருக்கோலத்தையும் தத்

துவங்களையும் மனதில் வைத்திருக்கும் வண்ணம் தூலமாக விக்கிரகங்களில் வடித்து வழிபடுதல் வழக்கம். மானச வழிபாடு இதில் தவிர்க்கப் படுவதில்லை. விக்கிரகங்கள் நினைவூட்டும் சின்னங்கள் என்பதே பொருத்தமாகும்.

பிரபஞ்ச உற்பத்தியின் பொருட்டுச் சிவபெருமான் அப்பனும் அம்மையும் ஆகிநின்று நடம்புரிவதை நம்முன்னோர்கள் கண்டார்கள். அந்தத் தத்துவத்தை யாவரும் அறியும் பொருட்டுச் சிதம்பரத்தில் நடராசனையும் நடேஸ்வரி ஆகிய உமாதேவியாரையும் காலத்தால் அழியாத கல்லில் அற்புதமான கைவண்ணத்தில் வடித்திருக்கிறார்கள் இந்துக்கள். உலகம் பாராட்டுகிறது இதனை.

இந்துக்கள் இறைவனை மானசமாகத் தொழுவதுடன் கோடி கோடி இன்பங்களைக் கொடுத்தருளும் பெருமானுக்கு நன்றிக்கடன்களையும் செலுத்துகிறார்கள். தங்களுக்கு அருமையான, வெகுபுனிதமான பண்டங்களையும் அவன் முன்னிலையில் வைத்துப் பணிகிறார்கள். புறச் சமயிகள் செய்யும் வெறுவாய்ச்சொல் நன்றிக் கடன்களிலும் பார்க்க இந்துக்களின் செய்கை மேல் என்பது பொருந்தும்.

## விபூதியின் மான்மியம்

''பொடி அணி திருமேனி புரிகுழல் உமையோடும்
அடிகள் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே''என்கிறார்

சுந்தரர் பொடி என்பது திருநீறு சைவர்கள் அணியும் சிவ சின்னந்தான் விபூதி, இது ஆன்மாவைப் பீடித்த மும்மல அழுக்கை நீக்குகிறது பசு என்பது ஆன்மா எனவே பசுவின் சாணத்தை மலத்தை அக்கினியில் சுட்டு வரும் நீறானது ஆன்மாவின் மல நீக்கத்தைக் குறிப்பதாகும். இந்த

விபூதி சிவனின் திருமேனியில் உள்ளது, எங்கும் உள்ளது என்பதை இந்து ஞானிகள் ஏலவே அறிந்து கொண்டனர் ஆனால்.

ஐதரசன் அணுத்தான் விபூதி என்கிறான் விஞ்ஞானி, இது தான் உலக உற்பத்திக்குக் காரணம் என்கிறான் அவன். எனவே, விபூதியின் மான்மியம் சொல்லவும் வேண்டுமா? மந்திரமாவது நீறு என்று தொடாங்கும் திருப் பதிகமும் இதனை உணர்த்துகிறது.

தூசியில் (அணுவில்) தோன்றிய மனிதன், தூசி ஆகிறான்; முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பராவதும் கண்டு பின்னும் என்று பாடுகிறார் பட்டினத் தடிகள் நீறுபூசிய மெய்யனும் அணுவும் ஒன்றென்பதை அறிவோமாக.

## திருநடனம் அணுநடனம்

பிரபஞ்ச உற்பத்தியின் பொருட்டுச்சிவன் ஆனந்த நடனம் செய்கிறார். இது ஐந்து வகைப்படும், ஞான நடனம் மூன்று ஊனநடனம்இரண்டு என்பர் .அறிஞர் இவற்றை இந் தியஞானிகள் அறிந்து சொல்கிறார்கள் ஆனால் மேலைத்தேச விஞ்ஞானிகள் 'புரோட்டோன்' 'இலக்ரோன்' என்பன வற்றின் ஆடலை, நடனம் என்று சொல்வதில்லை. அணுவினால் உருவாகிய நட்சத்திரத்துக்குள் நிகழும் ரசாயன மாற்றம் என்கிறார்கள்.அணுப் பரிசோதனைக் கூடத்தில் நேரில் கண்டனவற்றைப் பற்றித்தான் அவர்கள் விபரிக்க முடியும். பிரமாண்டமான தாரகை, தன் ஈர்ப்புச்சக்தியினால் (gravity) மேலும் மேலும் அணுக்கள் வந்து சேர அழுத்தம் அடைகிறது. வெப்பம் ஒரு இலட்சம் Fபாகையளவில், வாயுவாக இருந்த தாரகை திரவ நிலையில் ஒரு பெரிய பந்துபோல் காட்சி அளிக்கிறது. அணுநடனத்தில் முதல் கட்டமாக (Helium) என்ற வாயு உற்பத்தியாகின்றது. புரோட்டோன் களின் அதிவேக ஆட்டத்தினால் 4 புரோட்டன்கள் ஒன்றாகி ஹேலியம் வருகிறது.

இரண்டாம் கட்ட ஆட்டத்தில் 2 கோடி பாகை வெப்பத்தில் குறித்த ஹேலியம் உருகி காபன் பிறக்கிறது. அதன்பின் 20 கோடி பாகை அனலில் இரும்பு முதலியன தோற்றுகின்றன. 3ஆம், 4ஆம் கட்டங்களில் நாம் காணும் கனங்கூடிய நூற்றுக்கும் அதிகமான தனிப்பொருட்களும் (elements) உண்டாகின்றன. கடைசியாக 60கோடி பாகை அனலில் அந்த நட்சத்திரம் வெடிக்க 5ம் கட்ட நடனம் முடிவெய்துகிறது.

இந்த ஐந்துவகையான அணு ஆடல்கள் நிகழ பல கோடி ஆண்டுகள் செல்கின்றன. அவற்றின் பலநுணுக்கங்களையும் விஞ்ஞானிகளிடந்தான் வினவி அறிந்து கொள்ளல் வேண்டும் என்கிறோம்.

இந்து ஞானிகள் சொல்லும் ஐந்து திருநடனங்களும் குறித்த அணுநடனங்களும் ஒன்று தான் என்பதை வாசகர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். மற்றப்படி அணு விஞ்ஞான நுட்பஅறிவு, சாதாரணமான எங்கட்குத் தேவை தானா? ஆம், தேவை தான். சாதாரண மக்களும் அணு, வான, விஞ்ஞானங்களை அறியும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இந்த உண்மைகளை உலகம் பூராவும் அறிந்தால் ஒரே நாளில் உலக மக்கள் அனைவரும் இந்து சமயத்தவர்களாய் விடுவார்கள் என்பதில் சிறிதும்சந்தேகம் இல்லை என்கிறேன் நான்.

**வாழ்க! இந்துசமயம்!**
**வாழ்க! அணு, வானவிஞ்ஞானம்!**

அணுவும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அணுவும் சிவனும் ஒன்றென்ப தறிகிலார்
அணுவும் சிவனும் ஒன்றென்ப தறிந்த பின்
அணுவே சிவன் என அன்பு செய்வாரே,

(ஒருமந்திரம்)

# அனல் ஆகும் சிவன்

பரம் பொருளாகிய சிவபெருமானுக்குத் தான் எத்தனை நாமங்கள்! எத்தனை பட்டப் பெயர்கள்! "வெகு கோடி நாம சம்புகுமாரா" என்கிறார் அருணகிரியார்; அந்திவண்ணன், முக்கண்ணன், அழலாடி என்கிறார் சூடாமணியார். எரிபோல் மேனிப் பிரான் என்றும், ஐயன் காண்கையில் அனல் ஏந்தி ஆடும் கானவன் காண் என்றும், தீவண்ணன் என்று அப்பரடிகளும்; நீறு மெய்பூசி நின்று, அனல் ஆடும் பிரான் என்று சம்பந்தரும்; அழைக்கிறார்கள். அனல்ஆடி அழல்ஆடி என்று சிவனை அழைப்பதன் மர்மம் என்ன? இந்த அடியார்கள் எல்லாம் அவனை மானிடவடிவில் தான் கண்டார்களா? அல்லது கற்பனையா? அல்லது அணுவடிவில் கண்டார்களா? அணுவே போற்றி என்கிறார் மாணிக்கவாசகர். எனவே சிவனை அணுவடிவில் தான் எல்லாரும் கண்டார்கள் என்பது நிச்சயம் மாணிக்கரை நாம் நம்பலாம். எனவே

அணுவினால் உருவாகி, அனற்பிழம்பாகி, 2கோடி 20 கோடி, 60கோடி F. பாகை வெப்பநிலைகளில் உள்ளதும் பிரபஞ்ச உற்பத்திக்கு மூல காரணமான நட்சத்திரக் கோளத்தைத் தான் சிவன் என்று கூறினார்கள் என்பதுவே பொருத்தமானதாகும். பிறக்காரணங்கள் உண்டானால் அறிந்தவர்கள் கூறலாம். நாம் அதைக் கேட்போம். நன்றியும் கூறுவோம்.

சிவனும் அணுவும் இரண்டென்பர் அறிவிலார்
சிவனும் அணுவும் ஒன்றென்ப தறிகிலார்
சிவனும் அணுவும் ஒன்றென்பதறிந்தபின்
சிவனே அணுவெனத் தொழுது நிற்பாரே.

(மணி மந்திரம்)

## செல்லப்பா சுவாமிகள்

இறைவன் சிலவேளைகளில் குருவடிவில் வந்து இவ்வுலக வாழ்வின் நிலையாமையை மக்கட்கு உணர்த்தி அற நெறிப்படுத்தி ஆட்கொள்வதும் உண்டு. அப்படிப்பட்ட ஒருவர் தாம், யாழ்ப்பாணத்துச் செல்லப்பா சுவாமிகள். இவர் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த போது ஒருநாள் கண்ணன் என்றதுறவி இவரை மகாகவிபாரதியார் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவரை வரவேற்ற பாரதியார்:-

''ஜகத்தினில் ஓர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்
சாமிதனை யிவனென்றன் மனைக்கொணர்ந்தான்''

என்று வியக்கின்றார். அதன்பின்பு புதுவையில் செல்லப்பா சுவாமிகளைக்கண்டு;

''குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவிபதம் மறவாத தீரஞானி,
சிதம்பரத்து நடராச மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி
பரமபத வாயிலெனும் பார்வையாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்''

என்று பாடுகின்றார் பாரதியார்.

## யோகர் சுவாமிகள்

அப்படிப்பட்ட புகழ் வாய்ந்த செல்லப்பா சுவாமிகளின் சீடர் தான் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள். இவர் செல்லப்பா சுவாமிகளின் அருட்பார்வை பெற்றவர். இவர் ஒருநாள் செல்லப்பா சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்

பட்டு நல்லூர் முருகனின் சந்நிதிக்குச் சென்றார். அங்கே தேரடியில் இருந்த செல்லப்பா சுவாமிகளைக் கண்டு வணங்கிய போது.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன எல்லாம் பேசினான் —கூசாமல்
நின்றேன்; நீயாரடா என்று அதட்டினான்
அன்றே நான் பெற்றேன் அருள்" என்கிறார்

யோகர் சுவாமிகள். இவர் மாவிட்டபுரத்தில் இற்றைக்கு எண்பது ஆண்டளவில் சைவக் குடும்பத்தில் பிறந்து கல்லூரிக் கல்வி கற்று, இரணைமடுக்குளத் திட்டத்தில் அரசாங்க சேவையும் செய்தார். சேவையில் இருந்தபோதுதான், தன் குருநாதன் செல்லப்பா சுவாமிகளின் திருநோக்கம் பெற்றுத் துறவியானார். ஒரு சாந்த சொரூபி, உயர் சைவசித்தாந்த புலவருங்கூட. இவர் மெய்கண்டதேவரின் சிவஞானபோத சாரத்தை நற்சிந்தனை என்ற பெயரில் வழங்கியுள்ளார்.

இவை தவிர சுவாமிகள் மக்கள் சேவையே மகேஸ்வரசேவை என்று பணியாற்றுவார். இரவு பகல் ஓய்வில்லாமல் பொதுமக்கட்கு நல்உபதேசங்கள் செய்வார். அவரை சித்தாந்தி என்பர் பலர். அவருடைய பரவசநிலையை அறிந்தவர்கள் அவரை வேதாந்தி என்பர். உண்மை என்னவென்றால், தாயுமான சுவாமிகள் சொல்வது போல் அவர் ஒரு வேதாந்த சித்தாந்த சமரச நிலைபெற்ற சித்தர் என்றே சொல்லலாம். சுவாமிகள் ஒரு ஞானயோகி. சடயோகி அல்லர்.

அற்ப சிறு சக்திகளை வாலாயம் பண்ணி விரலைச் சுண்டி விபூதி, தருவிப்பதும் தருப்பை காசு முதலியவற்றை தருவிப்பதும் இக்காலத்தில் சில சடயோகிகள் செய்கின்றனர். இவர் அப்படிப்பட்டவர் அல்லர். தனது அருட்பார்வையால் சக்தி தேவியின் துணையால் பல்லாயிர

வரை நன்னெறிப் படுத்தினர். அவருடைய உபதேசங்களைப் பெற்று, நன்னெறிப் பட்டுத் துன்பங்கள் நீங்கிச் சுகம் பெற்றவர்கள் அநேகர். அவரைத் தங்கள் குருதேவராக வணங்கி ஈடேற்றம் பெற்றவர்கள் ஏராளம்.

மாணிக்க வாசக சுவாமிகள், தன்னைச் சிவமாக்கிய ஈசன், தன்னைப் பித்தனுக்கி விடவில்லையே என்று கவலைப் பட்டதும் உண்டு (திருவாசகம் ஆதாரம்) தனது நிர்விகற்ப சமாதி நிலையில் சுவாமிகள் ஒரு பித்தனைப் போல் காட்சி அளிப்பார், பேசாதன எல்லாம் பேசுவார். பஞ்சமா பாதங்களைச் செய்பவர்கள் அவர் முன்னிலையில் நிற்க முடியாது. எப்படிப்பட்ட பெரிய பதவிகள் வகிப்பவரும் பயப்படுவர். ஆனல் சாதாரண நிலையில் அவர் ஒரு சாது; சமயபேதம் அற்றவர். புகழ் பெற்ற சுப்றீங்கோட்டு நீதியரசர் அக்பர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்திறங்கியதும் யோகரைக் கண்டு அளவளாவி, அவருடைய நல்லாசிகளைப் பெற்றுத்தான் பணிக்குச் செல்வதைப்பார்த் திருக்கிறேன். பாம்பின் காலைப் பாம்பறியும் என்பது போல், ஞானிகளை ஞானிகளே அறிவர். எனது 21 வருட யூறிப் பணியின் போது' கண்ட அனுபவங்களையே மேலே குறிப்பிட்டுள் ளேன் என்பதைப்பணிவுடன் தருகிறேன்.

## முப்பெரும் தியாகம்

முற்காலத்தில் இல்லறம் நடாத்திய சைவப்பெருங் குடிமக்கள் சிவனடியார்களை உபசரித்து விருந்து செய்வது வழக்கம், ஒரு நாள் சிறுத்தொண்டர் என்பவரின் வீட்டுக்கு ஒரு சிவனடியார் வந்தார். வந்தவர் பிள்ளைக் கறிவேண்டும் என்ன, பெற்றதாய் தன் மகன் சீராளனை அமர்த்திப் பிடித்துக்கொள்ள, சிறுத்தொண்டர் தன ஒரே சீராளனை வாளால் அரிந்து கறிசமைத்து உணவூட்டினர் என்கிருர்

சேக்கிழார் அடிகள். தாங்க முடியாத, கொடுமையான சம்பவம் இது என்பதில் சந்தேகம் இல்லை· ஆனால் இதைப் பெருந் தியாகம் என்பதும் உண்மையே.

திருநீலகண்டர் என்னும் ஒரு சிவபக்தன் தன் இளமையைத் துறந்த சம்பவம் இன்னொன்று, இளம் மனைவியாகிய தன் பத்தினி, தன் கணவன் பிறர்மனை போனான் என்று சந்தேகம் கொண்டு, தன்னைத் தொடவேண்டாம் என்று திருநீல கண்டனை சிவனின் மேல் ஆணை இட்டாள் என்பதற்காக இளமையைத் துறந்து நரை திரை காணும் வயது வரையும், பெண் பால் விரும்பாமல் தியாகஞ் செய்த சம்பவத்தையும் சேக்கிழார் அடிகள் பெரிய புராணததில் குறிப்பிடுகிறார். இதுவும் தன் மனைவி இறைவன் மேலிட்ட ஆணையைக் காப்பாற்றச்செய்த தியாகம் தான்.

திண்ணன் என்னும் பெயருடைய வேடர் தலைவன் தான் பூசித்து வந்த திருக்காளத்தி நாதரின் ஒரு கண்ணில் இரத்தம் பாயக் கண்டு தன் கண்ணை அம்பினால் தோண்டி எடுத்து இரத்தம் பாய்ந்த கண்ணில் அப்பிக் குணப்படுத்தக் காளத்தி நாதரின் மற்றக் கண்ணிலும் இரத்தம் பாய தன் மற்றக் கண்ணையும் தோண்டும் போது, நில்லு கண்ணப்ப என்று தடுத்தான் இறைவன் என்று சொல்கிறார் சேக்கிழார்

இறை பக்தியினால் செய்த குறித்த மூன்று பெரும் தியாகங்களை, தன்னால் செய்ய முடியவில்லையே என்று கவலைப் படுகிறார் பட்டினத்து அடிகள்:-இதோ அவர்பாடல்:

"வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லன்,
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன்,
தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந்தப்ப வல்லேன் அல்லன்
நான்இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக் காளத்தி
அப்பருக்கே!"

குறித்த இந்த மூவர் பக்தியிலும் கண்ணப்பரின் பக்தியைச் சிறப்பாக காண்கிறார் சேக்கிழார் சுவாமிகள். இது நிசந்தானு? இதற்குப் பட்டிமன்றம் போடுவது தேவை தானு? திண்ணன் என்ற எளிய வேடன் அறுபத்துமூவரில் ஒருவனுகிய கண்ணப்ப நாயனுர் ஆனது மேன்மைக்குரிய தன்றே!

## மறு பிறப்பு

இந்துக்களின் மறு பிறப்புக் கொள்கையை இன்று ஏனைய புறச் சமயங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஆன்மாக்கள் பிறவிகள் தோறும் செய்து கொள்ளும் நல்வினை தீவினைகட்கேற்பப் பிறவிகளை எடுக்கின்றன.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார். என்கிறுர் திருவள்ளுவ நாயனுர். இதனை மாணிக்கவாசக சுவாமிகளும் தமது சிவபுராணத்தில்:-

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்று ஏங்குகிறுர். இதனுல் மறு பிறப்பு உண்டென்பது தெரிய வருகிறது. உயிர்கள் ஓரறிவு முதல் ஐயறிவுவரையும் உள்ள உடல்களில் பிறந்து ஈற்றில் ஆருவது அறிவான பகுத்தறிவுள்ள மனிதராகின்றன என்பது அறியற் பாலது.

## பரிணமக் கோட்பாடு

பத்தொன்பதாம் நூற்றண்டின் பிற்பகுதியில் சாள்ஸ் டார்வின் என்ற பிரபல ஆங்கிலேய விஞ்ஞானி வாழ்ந்தார். அவர் உலகம் முழுவதும் சென்று தாவரங்கள் பிராணிகளின் இயற்கை மாற்றங்களை ஆராய்ந்தார். காலப்போக்கில் அவைகளின் மாற்றம் ஏற்படுவதை அறிந்து "The origin of species by means of natural selection" என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார். பிசு பிசுத்த களிமண்ணல் மனிதன் படைக்கப்பட்டான் என்ற கொள்கை பரவி இருந்த அக்காலத்தில் அதற்குப் பலத்த எதிர்ப்பு தோன்றியது. பல கோடி வருடங்களாக இயற்கையில் காணப்படும் தாவரங்கள் பிராணிகள் பரிணம வளர்ச்சி அடைகின்றன என்றும் எழுதினர் சாள்ஸ் டார்வின். அவருடைய பரிணமக் கொள்கையை அக்கால விஞ்ஞானிகள் பகிரங்கமாக ஏற்கவில்லை. ஆயினும் இக்கால விஞ்ஞான மேதைகள் ஏற்கிருர்கள். இந்து சமயமும் டார்வின் கொள்கையும் ஒன்றுதான். அதன்படி ஆதியிலே பலகோடி ஆண்டுகட்கு முன் ஆணும் பெண்ணுமாக மிருகங்களோடு மிருகமாய் ஆடையின்றி, பேச்சின்றி, இருப்பிடமின்றி, தொழில் இன்றி அலைந்து திரிந்த மனிதக் குரங்கு பரிணம வளர்ச்சி பெற்றுச் சிந்திக்கும் தன்மை பெற்றது என்பது இந்துசமயக் கொள்கையாகவும் தெரிகின்றது.

## மனித உற்பத்தி

முதல் மனிதன் பெயர் சுவாயம்பு என்றும், அவன் மனைவியின் பெயர் சதரூபை என்றும், இவர்களுக்குப் பிரயவிரதன், உத்தானபாதன் என்று இரண்டு ஆண் மக்களும் ஆகுதி, தேவஹுதி, பிரகுதி என்ற பெண் மக்களும் பிறந்தனர் என்றும் கூறுவர்.

ஓரறிவுப் பிராணி முதல் ஆறு அறிவுடைய மனிதன் வரையும்உலகைத்தில் உயிரினங்கள் வாழ்கின்றன. பரிணாமமும் ஒரு ஒழுங்குமுறை பற்றித்தான் நடக்கிறது. ஆபிரிக்காவில் (Beave ) பீவர் என்ற வாலில்லாத வானரங்கள் காணப்படுகின்றன. அந்த இன வானரங்களின் வாழ்க்கை சாதாரண மக்களின் வாழ்க்கை போன்றது என்கின்றனர் ஆராய்ச்சியாளர். குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்றுமனிதன் தோன்றியமையை அவை விளக்கி நிற்கின்றன.

## நரகம்

நரக லோகம் என்றால் என்ன? அதுஎங்கிருக்கிறது நடத்துநர் யார்? அங்கே நடைபெறுவதென்ன? அதன் உரிமையாளர் யார்? அதுவெறுங் கற்பனையா? இல்லையேல் நிசந்தானா? என்று பலவினாக்கள் எழுகின்றன.

சந்தேகத்தின் பேரில் கைதாகி விசாரணையின் பின் பின் விடுவிக்கப்பட்ட உயிர்களுமுண்டு. சிலசமயங்களின் தீர்க்கதரிசிகளும் அங்கேபோய் ஒட்டிநின்று பார்த்துவிட்டுத் திரும்பியதாகவும் சொல்லப்படுகிறது.

இந்து சமயத்திலும் நிறைவேற்று அதிகாரமுள்ள இயமன் என்ற பிரதம நீதி அரசர் இருக்கிறார். செயலாளராகச் சித்திர புத்திரனார் என்ற சட்டமாஅதிபர், இறந்தவர்களின் விபரங்களை மன்றத்தில் வாசித்துச் சட்டவிதியின் படி விளக்கம் கொடுப்பார். யமகிங்கிரர்களால் கைது செய்யப்பட்டு சட்டத்தின் படி குற்றவாளியான நபர் ஆணோ பெண்ணோ நரகம் என்றசித்திரவதைக் கூடத்துக்குள் தள்ளப்படுவர். சந்தேகத்தின் பேரில் கிங்கிரகர்களால் கைதானவர்கள் விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் விடுவிக்கப்படுவார் தவிர குறித்த நரகலோகச் சிறைச்சாலையில் அவரவர்செய்த குற்றங்களுக்கு தண்டனை நடக்கும். ஆனால் அங்கே கொலை நடப்பதில்லை என்றும் ஏனெனில் ஆன்மா

அழியாதபொருள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் எங்கள் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் இளைஞர்கள் விசாரணைகள் இன்றி வதைக்கப்படுகிறார்கள். கொலையும் செய்யப்படுகிறார்கள். இவைகள் தான் அந்த நரகலோகத்துக்கும் இந்த நரகலோகத்துக்கும் உள்ளவித்தியாசங்கள் எனவுங் காண்க.

இதைவிட இன்னும் ஓர் வகையான நரகலோகத்தைப்பற்றிய தகவல்களை வானொலியில் கேட்டு மிகவும் பயந்தேன். அதன் சுருக்கம் பின்வருமாறு:- இறைவனுக்கு முழுஎதிரியான கேப்றியல் என்பவன் சொர்க்கலோகத்துக்குப் போட்டியாக ஒரு நரக லோகத்துக்குச் சர்வாதிகாரி என்றும் அவனுக்குக் கீழ் பத்தொன்பது மல்லர்கள் தொழில் செய்கிறார்கள் என்றும், இறைவனைத் தொழாதவர்கள் குருக்கள்மாருக்கு வரிசெலுத்தாதவர்கள், லோபிகள், வஞ்சனையால் மற்றவர் சொத்துக்களை அபகரிப்பவர்கள், கொலைகள், காமம் முதலான பாவங்களைச் செய்பவர்களை, அதிபயங்கரமான முறையில் தண்டிக்கிறார்கள் என்றும் உலகப்புகழ் பெற்ற ஒரு தீர்க்கதரிசி அங்கு நடக்கும் கொடுமைகளைநேரில் போய்க்கண்டு வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் நரகலோகத்தின் சிந்தனைகள் எவ்வாறிருப்பினும், அவைகள் இறை அச்சத்தை மக்களிடையே உண்டாக்கி மிருகத்தனமான நடத்தைகளைத் தடைசெய்கின்றன என்பது உண்மையே. ஆனால் இது விஷயமாக இந்துசமய ஞானிகள் என்ன சொல்கிறார்கள்? கருணாமூர்த்தியாகிய இறைவன் ஆன்மாக்களை தண்டிப்பது இல்லை. ஆன்மாக்கள் பிறவிகள் தோறும் செய்யும் தீவினையால் பிறந்து இறந்து தங்களைத் தாங்களே தண்டிக்கின்றன. பிறவியில் தான் எத்தனை துன்பங்கள்! எத்தனை அவலங்கள் எத்தனை மரணத் துன்பங்கள் இறைவனை அடையவேண்டிய ஆன்மாக்கள் தீவினையால் சாந்தி பெறாமல் அந்தரத்தே திரிந்துழல்கின்றன. இதனைத்தான் நரகவேதனை என்கின்றனர்.

இந்துஞானிகள், நரகலோக கற்பனைகள் எவ்வளவு நன்மை பயப்பினும் அவற்றின் அடிப்படை ஏழைகளைச் சுரண்டி வாழும் சுயநலந்தான் என்பது வெளிப்படை.

## உள்ளக் கமலம்

கலியுகத்தில் இறைவனை வெளியில் காணமுடியவில்லையே என்று கலியுக மனிதன் கவலைப்படுகிறான். எண்ணாயிரம் ஆண்டு விரதம் இருப்பினும் கண்ணார முதல்வனைக் கண்டார்கள் இல்லை என்கிறார் திருமூலநாயனார். ஆனால் இவர் தான் ஒரு சுருக்கமான முறையில் ஆண்டவனைக் காணலாம் என்றும் சொல்கிறார்.

''உடம்பினை இழுகாறும் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுல் உறுபயன் ஆவதும் கண்டேன்
உடம்புளே ஆண்டவன் கோயில்கொண்டான் என்று
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

ஆண்டவனை அடியாரின் உள்ளக்கமலங்களில் தான்காணலாம் என்பது திருமூலர் வாக்கு சுவாமி விபுலானந்த அடிகளும் இதைப்பற்றி என்ன சொல்கிறார் என்று பார்ப்போமா?

வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடிஇணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்தக் மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது''

என்கிறார்.

அப்பர்அடிகளும் இறைவனைப் பல நாட்கள் தேடி அலைந்திருக்கிறார். கடைசியாகத் தன் உள்ளத்திலே பெருமான் இருப்பதைக் கண்டு பெருமிதங்கொண்டு

''தேடிக் கண்டு கொண்டேன் – திரு
மாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்'' என்று மதுரகானம்
செய்கின்றார்.

## கை கூப்பிவணங்கு

இங்ஙனம் மனிதர்களின் உள்ளக் கமலங்களில் இருக்கிற பெருமானைக் கைகூப்பித் தொழ வேண்டாமா? இந்துக்கள் ஒருவரை ஒருவர் கை கூப்பித் தொழும் வழக்கத்தின் இரகசியம் இது தான் போலும். சிங்களவர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, "ஆயுபோவன்'' என்கின்றனர் ஆங்கிலேயர் 'குட்மோணிங், குட் ஈவணிங், குட்நைற் போடுகின்றனர். இஸ்லாமியர் சலாம் அலைக்கும் என்கின்றனர். சிலர் கை குலுக்கி வரவேற்கின்றனர்.

இவற்றுள் எல்லாம் கை கூப்பி வணங்கும் வணக்கமே சிறப்பான அர்த்தம் உள்ளது. மனிதரில் இறைவனைக் காண்பது தான் அது. இந்தவணக்கத்திற்கு மொழி தேவையில்லை, ஆண்பெண் பேதம் இல்லை சாதி, மத, இன வேறுபாடுகள் நீங்கும், மற்றவரின் உள்ளத்தில் இறைவன் வாழுகிறான் என்ற எண்ணமே மனிதனைத் தெய்வமாக்க வல்லது. அதை உணர்ந்தால் உலகில் சண்டைசச்சரவுகள் நீங்கி, அன்பும் சமாதானமும் நிலவும் என்பதில் ஐயமே இல்லை.

''எல்லாரும் இன் புற்றிருக்க நினைப்பதுவே''
அல்லாமல் வேறொன்று அறியேன் பாரபரமே''
என்கிறார் தாயுமானார்.

கை கூப்பி வணங்கும் இந்திய கலாசாரத்தை உலகம் வரவேற்குமா? ஏற்றால் உலக ஒருமைப்பாடு இதில் அமையும்–

## கிட்ன பரமாத்மா

திருமாலின் பத்துஅவதாரங்கள் போற்றப்படுகின்றன, கிருஷ்ணுவதாரத்தில் பாரதநாடாகிய இந்தியாவிலே துவாபரயுகத்திலே பரமாத்மா பிறந்தார். தன்சகோதரியின் வயிற்றில்பிறக்கும் ஆண்குழந்தையால் மாமனுகிய கம்சன் கொல்லப்படுவான் என்று நிமித்திகர் கூறியமையால் பிறந்த குழந்தை கிட்னனை கம்சன் கொன்று விடுவான் என அஞ்சி இரகசியமாக ஆயர்பாடியில் யசோதரை என்னும் இடைச்சியின் வளர்ப்பில் தாய் தந்தையர் விட்டார்கள்.

மாடுகளை மேய்த்து வந்ததால் இவருக்கு கோபாலன் என்னும் நாமமும் உண்டு. கண்ணன், மாயவன், மால், முகுந்தன், கோவிந்தன் எனவேறு பல நாமங்களும் உண்டு. இவரின் பாலப் பருவ லீலைகள் பல. வெண்ணெய் திருடி உண்பதில் வெகுபிரியன். அதற்காக உரலில் கட்டி வைக்கப்பட்டவர் இவர். வெண்ணெய் திருடி என்னும் பெயரும் இவருக்குண்டு.

இவர் பெரியவனுகி சத்தியபாமா, ருக்மணி என்னும் இரு பெண்களை மணந்து துவாரகாபுரிக்கு அரசன் ஆனுர்.

## பாரதப் போரின் உள்நோக்கம்

பாரதம் படித்தவனேடு பகை ஆகாது என்பது பழமொழி. பாரதம் படித்தவன் தீங்குகளை விளைவிக்கக் கூடிய பல சூழ்ச்சிகளை அறிந்திருப்பான் என்பது அதன் கருத்து. நாம் படிக்கும் பாரதயுத்தம் துவாபர யுகத்தில், நிகழந்தது. அவர்கள் அம்பு வில்லோடு சமர் புரிந்தார்கள். இக்காலத்தில் துவக்கோடும் குண்டோடுந்தான் போர் புரிகிறுர்கள். அதனுல் தான் இக்காலத்து இளைஞர்கள் பழைய பாரதக் கதையைப் படிக்க நேரமில்லைபோலும். உலகத்தில் ஏன் யுத்தங்கள் நிகழ்

கின்றன. என்பது பலருக்குத் தெரியாது. யுத்தங்களால் வரும் அழிவுக்கு மூலகாரணம் எது என்பதும் தெரியாது. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில் களையும் ஒருவனே தன் ஆணை வழியில் நடாத்து விக்கின்றான் என்பதை வெகுசிலரே அறிகிறார். அவன் தான் நடுவன் போல நின்று, தர்மம் வளரவும், அதர்மம் ஒழியவும் யுத்தங்களை உண்டாக்குகிறான். அதற்காக இறைவன் பல அவதாரங்களை எடுக்கிறான் என்பர் அறிஞர். அப்படியான அவதார புருடர்களில் ஒருவர் தான் மகா பாரதப் போரை நடாத்திய கிட்ணபரமாத்மா.

## பாகப் பிரிவினை

திருதராட்டிரன் பாண்டு என இரண்டு அரசர்கள் அண்ணன் தம்பி. திருதராட்டிரன் ஒரு குருடன். இவன் காந்தாரியை மணந்து துரியோதனன் முதலான நூறு ஆண்மக்களைப் பெற்றான். பாண்டு குந்திதேவியை (காந்தாரியின் சகோதரி) மணந்தான். அவன் ஒரு சாபத்தினால் மண்டைவெடித்து இறந்தான். குந்திதேவி துருவாச முனிவர் உபதேசித்த மந்திரங்களை வாங்கி கன்னிப்பருவம் அடையுமுன் சூரியனை நினைத்து ஒரு மந்திரத்தை உச்சரிக்க கன்னன் என்பவன் பிறந்தான் குந்தி நாணங் கொண்டு, கன்னனை ஒரு பேழைக்குள் வைத்து ஆற்றில் விட்டாள். கன்னத்தால் வெடித்ததால் அவனுக்கு அந்தப் பெயர். குந்தி அதன் பின் ஐந்து மந்திரங்களை ஓதி மக்களாகிய தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐவரையும் பெற்றாள். இவர்களை பாண்டவர்கள் என்றும் அழைப்பர்.

திருதராட்டிரனின் மக்களாகிய துரியோதனன் முதலானோரைக் கௌரவர்கள் எனவும் நூற்றுவர் எனவும் அழைப்பர். துரியோதனனும் தம்பிமாரும் அத்தினாபுரத்தில் இருந்து அரசாண்டனர். இவர்கள் மகாதுட்டர்கள். அக்கிரமங்கள் புரிவதே அவர்கள் தொழில். பாண்

டவர்கள் ஒழுக்கமும், வீரமும், உள்ளவர்கள். இவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரில் அரசாண்டனர். இவர்கள் ஒரு இராசசூய யாகம் செய்து பிறதேச மன்னர்களை வென்று பெரும் சிறப்போடும் செல்வத்தோடும் வாழ்வதைக் கண்ட துரியோதனன் பொறுமை கொண்டு அவர்களின் செல்வங்களைப் பறிக்கவும் அவர்களுக்கு உரிமையான பாதி நாட்டைப் பிடிக்கவும், எண்ணங் கொண்டு தன் மாமனாகிய சகுனி என்பவனோடு சதி செய்தான். தருமனோடு சூதாடினான் சகுனி. பாண்டவர்கள் தங்கள் நாட்டையும் சகல செல்வங்களையும் தங்களையும் தங்கள் மனைவி பாஞ்சாலியையும் சூதில் இழந்தனர். அது மாத்திரமா?

பாஞ்சாலியையும் சபைக்கிழுத்து அவள் துகிலை உரியவும் எத்தனித்தான் துரியோதனன். அவனுடைய தம்பி துச்சாதனன் என்பவன் பாஞ்சாலியின் துகிலை உரியும்போது துகில் உரியாமல் மேலும் மேலும் வளரும் படியாகக் கிட்னர் அருள் செய்தார். அதன்பின் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாத வாசமும் செய்து முடிந்தபின் சூதாடி இழந்த நாட்டை தருவதாகச் சொல்லி பாண்டவர்களைக் காட்டுக்குத் துரத்திவிட்டனர் கௌரவர். பாண்டவர்களைக் கொல்லப்பல சதிகளைச் செய்தனர். ஆனால் கிட்ண பரமாத்மா அவர்களைக் காப்பாற்றினார்.

வனவாசமும் அஞ்ஞாத வாசமும் முடிந்து பாண்டவர்கள் வந்து தங்கள் நாட்டைத்தரும்படி கேட்டுத் தூதனுப்பினர். ஐந்து வீடாவது தரும்படி கேட்க ஈ இருக்கும் இடம் எனினும் கொடுக்கத் துரியோதனன் சம்மதிக்கவில்லை. எனவே யுத்தம் மூண்டது.

## பதினெட்டாம் நாட்போர்

கிட்னர் நீதிமான்களாகிய பாண்டவர்களைக் காப்பதற்காக, ஏலவே உபாயங்களைச் செய்தார், தன் தங்கை சுபத்திரையை அருச்சுனனுக்குத்திருமணஞ் செய்து வைத்

தார். கன்னனை அருச்சுனன் வென்றால் தான், பூபாரம் தீரும் என்று அர்ச்சுனனுக்கு உதவிகளைச் செய்தார். கன்னன் துரியோதனின் உயிர் நண்பன். கங்கையில் பேழையில் மிதந்த கன்னனை ஒரு தேர்ப்பாகன் எடுத்து வளர்த்தான். பின்னர் கன்னன் திருதராட்டிரன் மகன் துரியோதன னுடன் அரண்மனையில் ராசகுமாரனைப் போல் வளர்க்கப் பட்டு, அங்க நாட்டுக்கு அரசனாகமுடிசூட்டப் பட்டான். துரியோதனனின் உயிர்த் தோழனாக விளங்கினான். கன்னன் சிறந்த வில் வீரனும், கொடைவள்ளலுமாக விளங்கினான். கன்னன் பாரதப் போரில் அருச்சுனனை வெல்லும் வல்லமை பெற்றிருந்தான். அதுவுமல்லாமல், அருச்சுனனுக்குப்பகை யான நாகாஸ்திரத்தையும் வைத்திருந்தான். இதனை அறிந்த கிட்ணர். கன்னனோடு பிறந்த கவசகுண்டலத்தை இந்திரன் மூலம வாங்கு வித்தார். பாசுபதம் பெற்றுக் கொடுத்தார். நாகாஸ்திரத்தை இரண்டாம் முறை விடாதபடி, குந்திதேவி யை அவனிடம் அனுப்பி கன்னனிடம் வரம் பெறச் செய் தார். உற்ற போரில் கற்றதை மறக்கும் படியான சாபத் தையும் பெறும்படி சூழ்ச்சிகளைச் செய்தார் கிட்ணர்.

குந்தி தேவி, கன்னன் தன்மகனென்பதை அறிந்து ஐவரோடு இணங்கும் படி கேட்டாள். அதற்கு கன்னன்

**இன்னவன் இனியான் என்று யாவரும் உணரா முன்னம்**
**மன்னவன் இவனே என்று மாமணி மகுடஞ் சூட்டித்**
**தன்னுடன் கூட உண்டு தார்மணி பொறுக்கிக் கோத்த**
**மன்னவன் செய்த நன்றி மறப்பனோ பிறப்புக்கெல்லாம்**

என்று கூறி, மறுத்தான். அதோடு தன்னை இன்னான் என்று தன் தம்பியர்க்குச் சொல்லவேண்டாம் என்றும், தான் அருச்சுனன் அம்பால் யுத்தகளத்தில் இறந்து கிடக்கும் போது, தன்னை இன்னான் என்று தெரிவிக்கும் படியும் கேட்டுக் கொண்டான். பதினெட்டாம் நாள்போரில் கன்னன் மாண்டான். பதினெட்டாம் நாள்முடிவில், பார்த்த சாரதி யான கிட்ணர். வில்லுக்கு விஜயன் என்ற அருச்சுனனை வெற்றி பெறச் செய்தார். காண்டீபத்தின் வலிமையால், கௌரவர் சேனை அழிக்கப்பட்டது. வீமன் கதையால் துரி யோதனனும் தம்பிமாரும் கொல்லப்பட்டனர். துவாபரயுகம் முடியக் கலியுகம் பிறந்தது.

# கிறிஸ்து பெருமான்

அவதார புருடர்களில் கிறிஸ்து பெருமான் குறிப்பி டத்தக்கவர். அவரைப் பின்பற்றுவதாகக்கூறும் பலகோடி மக்கள் வாழுகின்றனர். அவர் பெத்தலேகம் என்னும் சிற்றூரில் இற்றைக்கு 1987 ஆண்டுகளின் முன் ஒரு மாட் டுக் கொட்டிலில் பிறந்தார். அன்னை மரியாள் வயிற்றில் அற்புதமாகப் பிறந்த யேசு தனது 12 ம் வயது வரையில் பெத்தலேமில் வாழ்ந்தார். பின் அவருடைய 33 ம் வயது வரையும் அவர் வரலாறு தெரியாது.

கிறிஸ்து தன் இனத்தவர்களாகிய யூதர்களின் மூடப் பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் கண்டித்தார். அவர் அருளிய மலைப்பிரசங்கம் மிகஅருமையானது. குருடர் செவிடர் முடவர்களைக் குணமாக்கினர். ஆனல் யூதர்கள் அவரை நம்பவில்லை. அவரைப் பகைத்தார்கள்.

நானும் பிதாவும் (கடவுள்) ஒன்று என்ற அவருடைய வசனங்களைப் பிழையாக விளங்கி அவர் தன்னைக் கடவுள் என்று தேவதூஷணம் சொன்னன் என்று வழக்குரைத்து சிலுவையில் அறைந்து கொன்றனர்கள்.

அவர் ஒரு புனிதமான துறவி. பன்னிரண்டு ஏழை மீனவர்கள் அவருடைய சீடர்கள். அவர்களால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. ஆளோடுஆளாக மறைந்து திரிந்த அவரை யூதாஸ் என்ற அவருடைய சீடன் காட்டிக் கொடுத்தான்.

கிறீஸ்து பெருமானின் வார்த்தைகளில் இருந்து அவர் ஒரு புனிதமான அத்துவித சித்தாந்தி என்பது தெரிய வருகிறது. "மனிதன் கடவுள் அல்ல கடவுட்கு வேறான வனும் அல்ல" என்பது அத்துவிதக் கருத்தாகும். "நானும் பிதாவும் ஒன்று" என்பதின் பொருள் அதுவாகும். மேலும் அவர் சிலுவையில் தொங்கும் பொழுது "பிதாவே இவர் கள் அறியாமல் செய்கின்றனர்கள் இவர்கள் குற்றங்களை மன்னியும் என்று பிதாவை வேண்டுகிறர்.

யூதர்கள் அறியாமல் செய்த குற்றந் ,நான் என்ன அவர்கள் அறியாத பொருள் என்ன? நானும் கடவுளும் ஒன்று என்பதை அவர்கள் அறியாதது தான் அவர்கள் செய்த குற்றம் என்பது வெளிப்படையாகும். யேசு ஒரு புனிதமான அத்துவித சித்தாந்த முனிவர் என்பது பலரின் எண்ணமாகும்.

அத்துவித சித்தாந்தக் கொள்கை பாரத நாட்டில் அன்றி வேறெந்த நாட்டிலும் கிடையாது. பாரத நாட்டில் முனிவர்கள், ஞானிகள் சித்தாந்தப் பழங்கள் வாழ்ந் தார்கள், வாழ்கின்ருர்கள். கிறிஸ்து பெருமானுக்கு அத்து வித தத்துவம் இயல்பாக உள்ளதா? அல்லது பாரத நாட்டு க்கும் அதில் தொடர்பு உண்டா என்பது கேள்வியாக இருக்கிறது. 12 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட அருவருடைய வாழ்க்கை சந்தேகங்களை உண்டு பண்ணுகிறது. அவருடைய சித்தாந்தம் பாரத மணம் வீசுகிறது.

அன்பையும் உலக சமாதானத்தையும் நிலை நாட்ட யேசு அவதரித்தார். என்கிருர்கள், ஆனல் இன்று உலகில் காணமுடியாதவை எவை என்ருல், அவை, அன்பும், சமா தானமுந்தான் என்பது கண்கூடு.

யேசு பெருமான் மரித்து உயிர்த்த பின் பலபேர் காண வானத்தில் எழுந்து மறைந்தார் என்று கூறப் படுகிறது.

ஓர் அன்புப் பறவை வானில் மறைந்து விட்டதா?

# திருவள்ளுவரும் தனி நாயக அடிகளும்

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன், தமிழ்நாட்டிலே மயிலாப்பூரில் வள்ளுவ குலத்திலே ஆதிபகவன் என்னும் பெற்றருக்கு மகனாக திருவள்ளுவர் பிறந்தார். இவர் ஒரு பாவமும் இல்லாத நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாசுகி என்னும் பெண்ணை மணந்து எடுத்துக் காட்டான இல்லறம் நடாத்தினர். அவ்வை, உறுவை முதலிய புலவர்களும் வள்ளுவனாரின் உடன் பிறப்புக்கள் என்பர். இவரைச் சிலர் சமண சமயத்தினர் என்பர். இவர் ஒரு சைவ சமயத்தினர் என்பதற்கு பின்வரும் வெண்பா சாட்சி பகருகின்றது.

பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க - நாவில்
இழை நக்கி நூல் நெருடும் ஏழை அறிவோனே
குழை நக்கும் பிஞ்ஞகன் தன் கூத்து'' என்கிறார்

இவர் பிரமன், விட்ணு, இந்திரன் முதலானோர் அறியமுடியாத சிவபெருமானுடைய திருநடனத்தை ஏழையாகிய நான் அறியமுடியுமோ என ஏங்குகிறார் வள்ளுவர்.

திருக்குறளுக்கு ஒப்பானதும் மிக்கானதுமான ஒரு அறநூல் உலகில் இல்லை என்பர் அறிஞர். தெய்வத்தமிழ் மறை, பொய்யாமொழி, உலகப் பொதுமறை, என போற்றப் படுகிறது திருக்குறள்.

தேவர் குறளும் திரு நான் மறை முடிபும்
மூவர் தமிழும் முனி மொழியும்—கோவை
திரு வாசகமும் திரு மூலர் சொல்லும்
ஒரு வாசக மென் றுணர்.

என திருக்குறள் போற்றப்படுகிறது. திருக்குறளின் மேன்மையை உணர்ந்த மேனாட்டவரான G.U போப் என்னும் பாதிரியார் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். 20 க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் அது பெயர்க்கப் பட்டிருக்கிறது. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் புகழுகின்றார். மேலும் அவர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்
போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் எங்கணுமே பிறந்ததில்லை: உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை
ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய், வாழ்
கின்றோம்; ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்
முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்று பேரிகை கொட்டுகிறார் பாரதியார். என்னே ஆர்வம்! மேனாட்டுப் புலவர்களான ஷேக்ஸ்பியர், மில்ற்றன், ஹோமர், டான்டே முதலியோர்களையும் அல்லவா பின்னணியில் போடுகின்றார் மகாகவி பாரதியார்.

பாரதியின் மனநிறைவு பூர்த்திபெற, கனவு நனவாக தேமதுர தமிழோசை உலகமெங்கும் பரவ, அவதரித்தார் தனிநாயக அடிகள். ஈழத் தமிழ் மண்ணில் நெடுந்தீவில், இருமரபுந் துய்ய தனிநாயக முதலியார் மரபினரான இவரது தந்தை கணபதிப் பிள்ளை, ஸ்ரனிஸ்லாஸ்' என்னும் ஆங்கில ஆசிரியருக்கு சிரேட்ட மைந்தனாகப் பிறந்த தனிநாயகம், யாழ் சம்பத்திரியார் கல்லூரியில் கல்வி கற்று, கத்தோலிக்க திருச்சபையில், ஒரு சுதந்திர துறவியாகி, இறைபணிக்கு தன்னை அர்ப்பணித்தார். பின்னர் ரோமாபுரியில் சிலகாலம் மறைக்கல்வி கற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள்வரை கல்வி

கற்று தேறினர். இக்காலத்தில் அவர் செய்த ஆய்வுகளின் பயனே, என்னவோ, இறைபணிக்கு தன்னை அர்ப்பணித்த தனிநாயக அடிகள், தமிழ்ப் பணிக்கு தன்னை அர்ப்பணிக்க துணிந்தார். "என்னை இங்கு இறைவன் படைத்தது, தன்னை நன்கு தமிழ் செய்யுமாறே" என்ற திருமூலரின் வாக்கை முன் வைத்து, வியப்புக்குரிய பேரார்வத்துடன் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டார்.

18 பாஷைகளில் பாண்டித்தியம் பெற்ற இந்த மாமேதை, உலகை வலம் வந்து, சர்வதேச அரங்குகளில் தமிழ் முழக்கம் செய்தார். திருக்குறள் தான் அவருக்கு உயிர் என்பது மிகையாது.

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் உலகில் பல ஆயிரம் ஆயிரம். நமது ஈழநாட்டில், ஆறுமுக நாவலர் சுவாமி ஞானப் பிரகாசர், பண்டித ரத்தினம், தாவீதடிகள், கயிலாயபதி முதலியோரைக் குறிப்பிடலாம் தமிழ்நாட்டிலோ பல நூற்றுக் கணக்கான விசேட தமிழ் தொண்டர்களைக் குறிப்பிடலாம். பண்டிதமணிகள், மகாவித்துவான்கள், மகா நாவலர் பாவலர்கள், புலவர்கள், கலாநிதிகள், பேராசிரியர் கள், மகாமகோ உபாத்தியாயர்கள், அகிலன், புதுமைப் பித்தன் போன்ற எழுத்தளர்கள் ராசாஜி, கருணாநிதிபோன்ற கலைஞர்கள் உரை ஆசிரியர்கள், வாரியார் போன்ற உபந்நியாசகர்கள், இன்னும் எத்தனை எத்தனையோ பேர்களை அடுக்கலாம், அடுக்கினல் பட்டியல் பல மைல்கள் நீளும் என அஞ்சுகிறோம்.

முன்னர் குறிப்பிட்ட தொண்டர்களில் அநேகர் ஒரு குறுகிய வட்டத்துக்குள், தமிழ்நாட்டின் எல்லைக்குள் நின்று தொண்டு செய்தவராவர். ஆனல் தனிநாயக அடிகளின் தொண்டு மிகவிரிவுடையது. அகில உலகப் புகழ் பெற்றது. தனிநாயக அடிகள் தமிழாராய்ச்சி மகாநாடுகளை தொடக்கி நடத்தினர். உலகமேடைகளில் நின்று பேருரைகள் நிகழ்த்தி தமிழுக்கு மகிமை தேடினர்.

''தமிழ் விடு தூது, 'ஒன்றே உலகம்', நம்மொழி உரிமைகள், The Nature in Ancient Thamil Poetry, முதலிய பல நூல்களை யாத்து தமிழ் அன்னைக்கு மணி ஆரம் சூட்டினர்.

அடிகளாரைத் 'தமிழ்தென்றல் என்றும்', திருகுறள்த் தாகம் என்றும் தமிழுலகம் பாராட்டியது. திருக்குறளில் அடிகளார் வைத்த மதிப்புக்கும் காதலுக்கும் எல்லை காண்பது அரிது.

''திருக்குறளை எல்லாரும் படியுங்கள். படித்து அதன் வழி ஒழுகுங்கள் இகபரம் இரண்டிற்கும் அதுவழிசொல்லும். பிற நூல்கள் கற்கத் தேவையில்லை. இல்லறம் துறவறம் இரண்டினையும் சிறப்பாக எடுத்துரைப்பது திருக்குறள் தான்'' என்று மேடைகளில் முழங்குவார் அடிகளார். வயது 70 ஐ கடக்கின்றது. என் ஐம்புலன்களும் ஒடுங்கி விட்டன. சோர்வு மேலிடுகிறது, ஆனால் எனது தமிழ் ஆர்வம் இன்னும் சோர்வடையவில்லை என்ற அவருடை மேடைப் பேச்சைக்கேட்டு கண்ணீர் விட்டனர். மக்கள் சிலர் ''கத்தோலிக்க திருமறைக்கு தொண்டு செய்ய வெளிப் பட்ட ஒரு துறவி, தமிழ் மறை ஆகிய குறளுக்குதொண்டு செய்கிறாரே என்று முணுமுணுத்தனர். மக்கள் மத்தியில் இன்று அவர் இல்லை, தெய்வமாகிவிட்டார்.

ஆனால் ஒரு கவலை. தமிழ் கூறும் உலகம் நன்றி யுள்ளது. சிறிய சேவைகள் செய்தோர்க்கும், ஏன் கல்வி அறிவில்லாத நடிகர்கட்கும் ஞாபக சிலை எடுக்கும் தமிழ் மக்கள், உலகளந்த புகழுடைய தனிநாயக அடிகளுக்கு இன்னும் ஒரு ஞாபக சிலை எடுக்க வில்லையே! வெங்கலச் சிலை அல்ல, தங்கச் சிலைக்கும் தகுதி வாய்ந்த அடிகளை தமிழ் உலகம் மறந்து விட்டதா?

# ஸ்ரீ ராம பிரான்

இராமபிரான் திருமாலின் அவதாரம் துஷ்டநிக்கிரகஞ் செய்து நீதிமான்களைக் காக்க இந்த பூமியில் வந்த மூர்த்தி. இவர் கோசலை என்ற திருமாதின் வயிற்றில் பிறந்த தசரத சக்கரவர்த்தியின் சிரேட்ட மகன் ஆவர். இவர் மனிதனாகப் பிறநது உயர்ந்த மனிதப் பண்புகள் உள்ளவராய் விளங்கினாலும் அவருடைய நற்குணநற்செயல்களில் தெய்வீகத்தைக் காணமுடிகிறது.

தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்தவன். தசரதகுமாரன் இராமன் என்பர் பெரியோர். தசரதர் தன் இளையமனைவியாகிய கைகேயிக்குக் கொடுத்த வரத்தைக் காப்பாற்ற தன் முடிக்குரிய அரச பதவியைத் துறந்து இராமர் காட்டுக்கேகிப் பதினான்கு வருடம் வனவாசத்தை ஏற்றுக் கொண்டார். இதில் இவரின் விருப்பு வெறுப் பற்ற மனப்பாங்கு தெய்வீகத்தை காட்டுகிறது.

இவர் பாரத நாட்டில் குலதெய்வமாக வணங்கப் படுகிறார். அகிம்சாமூர்த்தியாகிய காந்தி அடிகள் இராமபிரானைத் தெய்வமாக வணங்கி வந்தார். கோட்சேயின் குண்டுகளால் தாக்கப்பட்டு சாகும்போதும் ராம், ராம் ராம் என்று சொல்லி இறந்தார் காந்தி.

இவர் மகாலட்சுமியின் அவதாரமான ஜானகியை மணந்தார். இந்தத் திருமணத்தைச் செய்ய மேருமலை போன்ற சிவதனுசை முறித்தார். இச்செயல் அவருடைய சர்வ வல்லமையைக் காட்டுகிறது. இவர் ஏகபத்தினிவிரதன், சைவன். சகோதர வாஞ்சை உள்ளவர்.

இவர் சீதையுடன் வனவாசம் செய்கையில் தண்டகாருண்ய வனத்தில் ஆச்சிரமத்தில் தங்கி இருந்தபோது மாமன் மாரீசனை மாயமானாக அனுப்பி இராமலட்சுமணரை

அதன்பின் செல்ல விட்டு இராவணன் என்னும் அரக்கன் சீதையைக் கவர்ந்து கொண்டு போய்த் தென்னிலங்கையில் உள்ள அசோக வனத்தில் சிறை வைத்திருந்தான். இராவணன் இலங்காபுரியை ஆண்ட அரசன். தவஞ்செய்து சிவனிடம் முக்கோடி ஆயுளும், வாளும் பெற்றவன். கயிலாய மலையைத் தூக்கியவன், அட்டதிக்கு யானைகளை மடக்கியவன், பத்துத்தலைகளுடைய மகா வல்லமை பொருந்திய அரக்கன். இலங்காபுரியில் இவனுடைய குடிகளாகிய அரக்கர்கள் முனிவர்களையும், மனிதர்களையும் கொடுமைப்படுத்தினர்' உயிரோடு விழுங்கினர்.

கடத்தப்பட்ட சீதை இருக்குமிடத்தை, அனுமாரால் அறிந்த ஸ்ரீராமர் சீதையை சிறைவிடும்படி அங்கதனையும் தூது அனுப்பினர். இராவணன் தம்பிகும்பகர்ணனும் சீதையை விடும்படி தமையினிடம் வேண்டினன். இராவணன் இணங்கவில்லை. எனவே இராமர், அனுமான், சுக்கிரிவன் முதலிய குரங்குப் படைகளுடன் சென்று, அரக்கர் குலத்தை அழித்து இராவணனைக் கொன்று சீதையைச் சிறைமீட்டு, இராவணன் தம்பியாகிய விபூஷணனை இலங்காபுரிக்கு அரசனுக்கி மீண்டார்.

தீங்கான செயல்களை நீக்கி, நல்லோரைக் காப்பது தெய்வ நீதியல்லவா? ஆனாலும் அரக்கர்களை அழித்த பழிக்கு பிராயச்சித்தமாக பிரமஹத்தி தோஷம் நீங்க ஸ்ரீராமர், இராமேஸ்வரத்தில் சிவலிங்கம் தாபித்து சிவ வழிபாடு செய்தார் என்பது வரலாறு. தற்போது இராமேஸ்வர தேவஸ்தானத்தில் உள்ள சிவலிங்கம் ஸ்ரீராமனுல் பூசிக்கப்பட்டதாக அறிஞர் கூறுவர்.

"ரகுபதிராகவராஜாராம்
பதீத பாவன சீதாராம்" என்பது காந்தி அடிகளின் பிரார்த்தனைக்கீதம். ஸ்ரீராமன் தெய்வீகம் திகழும் திருமாலின் அவதாரம் என்பதில் ஐயம் இல்லை. பிறன்மனைநயத்தல் என்னும் அறத்துக்கு மாறுன தீமையை செய்ததினுல் இராவணன் சிவபெருமானிடம் பெற்ற மூன்று கோடி ஆயுளையும் மூவுலக ஆட்சியையும் பிறவரங்களையும் முதனுட் போரில் இழந்து வெறும் கையோடு நிற்கும்போது "இன்றுபோய் நாளை வா" என்றது பகைவனுக்கும் அருளும் தெய்வீகப் பண்பல்லவா?

# பகவான் ஸ்ரீ ராம கிஷ்ணர்

இறைவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியும் அல்ல, புறச்சமயத்தவர் அவரை ஆணாக கற்பனை பண்ணி வணங்குவர். இந்துக்கள் மாத்திரம் கடவுளைத் தாயாகவும் வணங்குவர். பகவான் காளிதேவியைத் தனது அன்னையாக உபாசித்து அவளின் அருளைப்பெற்ற ஜீவன் முத்தர். மகாமுனிவர் அவருடைய மனைவி சாரதாமணி தேவியும், அவரும் இறைவி பணி செய்தும் மக்கள் தொண்டு செய்தும் வாழ்ந்தனர் அவர்கள் இல்லறத்தில் உள்ள சிற்றின்பசுகத்தை வெறுத்த துறவிகள், மகாயோகிகள் தூய்மை உள்ளவர்கள்.

பகவான் 19 ம் நூற்றூண்டின் பிற்பகுதியில் இந்தியா வில் பிறந்தார். இயமலை அடி வாரத்தில் மாயாவதி என்னும் அவருடைய ஆச்சிரமம் இருக்கிறது. அங்கே உலகின் பல நாடுகளில் இருந்தும், லட்சோப லட்சம் மக்கள் அவரை வந்து கண்டு அவருடைய உபதேசங்களைக்கேட்டு நல் வழிப் பட்டனர். பலர் துன்பங்கள் நீங்கப்பெற்றனர். நோயாளர் குணமாகினர்.

அவருக்குக் கிறிஸ்து நாதர் போல, பன்னிரண் சீடர்கள் இருந்தார்கள். உலகப் புகழ்பெற்ற வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் அவருடைய சிடர்களில் ஒருவர் என்றால், குருதேவர் ராமகிஷ்ணருடைய மகிமைகளைச் சொல்லவும் வேண்டுமா? தாயான அருட்சக்தியின் அருளைப் பெற்ற பகவான். அவளோடு ஒன்றான பரவச நிலையில் ஆனந்தக் கூத்தாடுவார். இதனை நிர்விகற்ப சமாதி நிலை என்பர் வேதாந்திகள்.

அம்பிகையுடன் ஒன்றாகி பகவான் ஆடும் (பரவச) நிலையை நரேந்திரன் தொடக்கத்தில் நம்பவில்லை. அகந்தை கொண்டவனாக இருந்தான். குருதேவர் நயன தீட்சையினால் அன்னையின் அருட்சக்தியை அவனில் ஏற்றி (நிர்விகற்ப) சமாதி நிலை என்ன என்பதைக் காட்டினார். ஏனைய பதினொரு சீடர்களையும் அவ்வாறு பக்குவப் படுத்தினார். நரேந்திரனே

பின்னர் விவேகானந்தர் என்னும் தீட்சா நாமம் பெற்றார்· கோபாலனைத் தன் மகனாகப் பெற வேண்டும் என்று வீறு பிடித்து அலைந்த ஒரு கிழவியின் கையில் குழந்தையாக கோபாலனை வரச் செய்தார். அன்று தொடக்கம் அவள் சாந்தி பெற்றாள்.

பகவான் இந்துசமயி ஆனாலும் சமய சமரச ஞானி. நதிகள் முடிவில் கடலில் சங்கமிப்பது போல, எல்லாச் சமயங்களும் ஒரே இறைவனையே தேடுகின்றன என்பது அவர் கொள்கை. மக்கள் சேவையே மகேஸ்வர சேவை என்பது அவருடைய சமயம். அதனால் அவர் புதிதாக ஒரு சமயத்தையும் போதிக்கவில்லை.

தன்னுடைய சீடர்களுக்கு அன்னையின் சக்தியை ஏற்றி, அவர்களைப் பொதுநல சேவைக்கே அர்ப்பணித்தார். இன்று உலகம எங்கும் இராமகிருஷ்ண மடங்களையும், துறவிகளையும், காண முடிகிறது. பாடசாலைகள், கல்லூரிகள் அனாதை விடுதிகள், கழகங்கள், ஸ்ரீ இராமகிருஷ்ணர் நாமத்தோடு சேவை ஆற்றுகின்றன

கடைசியாக, அல்லும் பகலும்மக்கட் சேவைக்குத்தன்னை அர்ப்பணித்த பகவான், தன் தேகசுகத்தைப் போணாமல் நோயுற்று, 1885 ம் ஆண்டு மாயாவதியில் சமாதியானார் பின் அவருடைய கொள்கைகளைச் சுவாமி விவேகானந்தர் உலகெங்கும் பரப்பி உலகப் புகழை நாட்டினார். இந்துசமய மேன்மைகளை, உலகறியச் செய்த அவருடைய சிக்காக்கோ பிரசங்கம் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

## காந்தி மகான்

அகிம்சா மூர்த்தியும் சீர்திருத்தவாதியும், விடுதலை வீரரும், சர்வசமய சன்மார்க்க வாதியும், ஸ்ரீ ராம பிரானைக் குலதெய்வமாக கொண்டவருமான காந்தி அடிகளைப் பற்றி சிறிது சொல்லுவாம் காந்தியைத் தெரியாத குழந்தைகளுமில்லை என்பது புதுமொழி.

வாழ்கநீ எம்மான் இந்த வையக்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா நீ வாழ்க! வாழ்க!

என்று பரதியார் வாழ்த்துகிறார். சத்தியம் அகிம்சை என்ற கோட்பாடு கொண்டு சுதந்திரப் போரில் ஈடுபட்ட அவரை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும், கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் செய்யும் வீரன் என்று புகழ் மாலை சூட்டுகின்றார்.

இவர் ஒரு சிறந்த சமரசவாதி என்பது அவருடைய தாரகமந்திரமான "ரகுபதிராகவ ராஜாராம்" என்றபிரார்த்தனைப்பாடலில் தெரிகிறது காந்தியை ராமா வதாரம் என்று சிலர் சொல்வர். சிலர் அவரைக் கிறிஸ்துவின் அவதாரம் என்பர், ஆனால் அவர் தம்மை ஒரு சாதாரண மனிதன் என்று சொல்லி வந்தார்.

எழுபது இறாத்தல் நிறையான ஒரு மினி மனிதன் ஆனால் 30 கோடி மக்களை விடுதலைக்காக வீறிட்டெழுந்து போராடவைத்த ஒரு மந்திர வாதி. அது மாத்திரமா? உலகிலே பெரிய ஏகாதிபத்திய வல்லரசை நடுங்க வைத்த ஆன்ம வீரன். ஏழைகளின் வாழ்வான கதர் இயக்கத்தின் பிரமா, சுத்த சைவன், ஆட்டுப் பாலும் பேரீச்சம் பழமுமே அருந்திவந்த தவசி, நாலுமுழக்கதராடையும், ஒருதுவாயுமே அணிந்த பக்கிரி.

இப்படியான குண நடையுள்ள காந்தியார் 5 ம் ஜோர்ச் மன்னரால், வட்ட மேசை மகா நாட்டுக்கு அழைக்கப்பட்டார், அங்கு லண்டன் பாளி மேந்து சபையில் பேசும்படி மன்னர் கேட்டுக் கொண்டார். அப்போது பிரதமராக இருந்த சேர்ச்சில், என்பவர் "அந்த அரை நிர்வாணப்பக்கிரி (காந்தி) சபைக்கு' வரும் போது, எவருமே எழுந்து மரியாதை செய்ய வேண்டாம்" என்று அறிவித்தல் கொடுத்திருந்தார். ஆனால் அந்த அரை நிர்வாண பக்கிரி சபைக்குள்

வந்ததும் சபையில் குழுமி இருந்த 600 க்கு மேற்பட்ட உறுப்பினரும் ஏனையோரும், எழுந்து. தொப்பி நீக்கி மரியாதை செலுத்தினர். அதைக் கண்ட சேர்ச்சில் துரையும் எழுந்து மரியாதை செலுத்தினர். இந்தச் சம்பவம் மகாத்மாவின் ஆன்மீக சக்தியின் சிறப்பைக் காட்டுகிறதல்லவா.

மகாத்மாவின் அகிம்சா முறையைப்பின் பற்றி இந்துக்கள் ஆயுதம் ஏந்தாத சாத்வீகப் போரில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் பிரிவினை கோரிய வடஇந்திய இஸ்லாமியர், ஆயுதப் போரில் இறங்கினர். வங்காளத்தில், நவகாளி என்னும் இடத்தில் ஒரு வாரத்தில் ஆறு லட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டனர். இதனைக் கண்ட இந்து மகா சபையினர், ஒரு கருத்தரங்கில் காந்தியைக்கொலை செய்யத்திட்டம் போட்டனர். 600 பேர் கூடிய அந்தச் சபையில் இருந்தவர் எவராவது மகாத்மாவைக் கொல்ல முன்வரவில்லை. எனவே திருவுளச் சீட்டுப் போட்ட போது, கோட்சே என்னும் எம். ஏ. பட்ட தாரியின் பெயருக்கு விழுந்தது அதைக் கண்ட கோட்சே எழுந்து "அந்தப் புண்ணியவானை நான் கொலை செய்யேன்" என மறுத்தான். இரண்டாம் முறை சீட்டுப் போட்ட போதும் கோட்சேயின் பெயர் வந்தது. எனவே திருவுளம் அது வாகக் கோட்சே காந்தியைக் கொன்றான்,, உலகம் அதிர்ந்தது. இந்து முஸ்லிம் கலகம் ஒய்ந்தது.

---

சமாதானத்துக்காக, சாத்வீகமான அகிம்சைப் போரை உலகத்துக்கு காட்டிய மகாத்மா உயிர் நீத்தார்.

**வாழ்க! அகிம்சா தர்மம்**

**வாழ்க! காந்தி நாமம்.**

# கடவுள் வந்தாரா?

அறிவு தெரிந்த காலத்தில் இருந்து இன்று 84 வயது வரைக்கும் கடவுளை நேரில் காண வேண்டும் என்ற ஆசை என்னை விட்டு நீங்கவில்லை. கடவுள் இருக்கிறார் என்று எத்தனையோ பேர் சொல்லக் கேட்டும், எத்தனையோ புத்தகங்களைப் படித்தும் சிந்தித்தும் வந்தித்தும் மனம் அடங்கவில்லை. சமீபத்தில் திருமூல நாயனாரின்.

> ''எண்ணாயிரம் யாண்டு விரதம் இருப்பினும்
> கண்ணாரை முதல்வனைக் கண்டார்களில்லை.''

என்ற செய்யுள்வரிகளை வாசித்ததும், மனம் நொந்து, தயக்கத்தில் படுத்திருந்தேன்: அப்போது,

மெல்லிய சல்லா உடுத்து
  விபூதி உத்தூடணமாய்ப் பூசி
சொல்லிய பொட்டும் இட்டுச்
  சோமன் உத்தரியம் பூண்டு
மெல்லெனக் கதவைத் தட்டி
  வந்தவர் தன்னைக் கண்டு
ஒல்லென எழுந்து கூப்பி,
  ஐயநீர் யாவர் என்றேன்.

அதற்கு அவர் மகனே, நீ காண வேண்டும் என்று ஆசைப் பட்ட கடவுள் நான் தான். பயப்படாதே' வேண்டியதைக் கேழ்'' என்றவர் ஒரு ஆசனத்தில் அமர்ந்தார் நான் கூப்பிய கையோடு ''சாமி நீர் இற்றைக்கு ஆயிரம் வருடங்கட்கு முன்னாக, மானிடவடிவந் தாங்கி வந்து, இப்பூமியில் உள்ளவர்களோடு உறவாடி, சிரித்து, கதைத்து, விளையாடி, பல உதவிகளை உமது அடியார்களுக்கு செய்ததாகக் கேள்விப் படுகிறேன். அது உண்மை தானா? அப்படியானால் மிகவும் பரிதாபமான நிலையில் அல்லற் பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பூமியில் வராமல் மறைந்து திரியலாமா? நீர் அருள்

புரியா விட்டால் இந்த அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேறுயாரால் முடியும் ஐயா,'' என்று இரங்கினேன். அதற்கு அவர் மகனே நீ அறியாமல் பேசுகிறாய். எல்லாம் தெரிந்தவன் நான். கற்பகோடி காலங்களைக் கண்டவன். யாவருக்கும் மேலானவன். அணுவாக நின்றாடி, முத்தொழில் புரிபவன் நான். பிரமவிட்டுணுக்களும் எனதாணையின் வழியே தொழில் செய்கிறார்கள் நிற்க.

இப்போது நடப்பது கலியுகம், இக்காலத்து மனிதர்கள் கலியன்கள், மிககெட்டவர்கள். முன்னே கிரேத,திரேத துவாபரயுகங்களில் வாழ்ந்தவர்கள் இவர்களை விட எவ்வளவோ மேலானவர்கள். கள்ளங்கபடம் அற்ற உள்ளம் படைத்தவர்கள். என்னை நேசித்தார்கள். ஆனால் இந்தக் கலியன்களில் 60 % வீதமானோர் கம்யூனிஸ்டுகள், நன்றி கெட்டவர்கள். 20 சதவீதமானோர் வெளவால் பிறவிகள். 20 சதவிதமானவர் ஏழைகள், தாங்கள் செய்த பாவத்தால், குருடு, செவிடு, நொண்டிகளாய் பிறந்தவர்கள். வறியவர்கள். அடகண்கெட்ட கடவுளே எங்களை ஏன் படைத்தாய் என்று திட்டுகிறார்கள்.

நான் மனித வடிவில் வந்தால் மோசம் செய்வார்கள். என்னைச் சுற்றி வளைத்து, அவசியமற்ற பல வினாக்களை வீசுவார்கள். நீதானா கடவுள் என்பார்கள். ஆம் என்றால் நம்பமாட்டார்கள். புதுமைகளைச்செய்து காட்டினால் அட, இவன் மந்திர வாதி, மலையாள வித்தைக் காரன் என்பார்கள் நீ, நரமாமிசம் புசிப்பதில்லையா என்பார்கள். இல்லை என்றால். நீ படுபொய்யன் சிறுத்தொண்டன் மகன் சீராளனின் இறைச்சிக் கறி தின்னவில்லையா? ஆபிரகாம் மகன் இஸ்மெயிலின் இறைச்சிக்கு ஆசைப்படவில்லையா என்பார்கள். நான் பேசாமல் நின்றால், நீ, பிள்ளையைத் தின்னும் பிரம ராட்சதன் என்பார்கள். நீ ஒரு போசனப் பிரியன். ஒரு கிழவியின் பிட்டுக்கு ஆசைப்பட்டு, மாறன் கையால் பிரம்படி படவில்லையா? என்று நகைப்பார்கள். நீ ஒரு கலியாணத் தரகனா? பரவையாருக்கு மணம்பேசிப்போக

வில்லையா என்று நகைப்பார்கள். உன் கழுத்தில் தொங்கும் மண்டை ஓட்டுமாலை வந்தவிதம் என்ன? சொல்லென்று வற்புறுத்துவார்கள். அது முன்னே இறந்த பிரமன். மால் முதலானோரின் எலும்பு என்றால், ஐயோ இவன் பெரும் பித்தன், இறைச்சியைத் தின்றதும் அல்லாமல் எலும்பையும் கட்டிக் கொண்டு திரிகிறானே என்று கேலிசெய்வார்கள். அல்லா என்பதும் பிதா என்பதும் உன்னைத் தானா என்பார்கள். ஆம் என்றால் நம்ப மாட்டார்கள்.

கடைசியாக, இவன் மனிதரை மாத்திரமல்ல தேவர்களையும் கொல்லும் மகா பாவி, கொலையாளி, இவனைத் தப்பிப் போக விட்டால் இந்த பூமியில் உள்ள 470 கோடி மக்களையும் பிராணிகளையும் தின்று பசி ஆறுவான். இவனைப் பிடியுங்கள் கொல்லுங்கள் என்று ஆர்ப்பரித்து என்னில் கை வைக்கவும் பார்ப்பார்கள். தப்பினால் குண்டால் அடிப்பார்கள், அதற்கும் தப்பினால் ஏவுகணைகளை வீசுவார்கள். இப்படிப் பட்ட நன்றி கெட்ட பாவிகள் வாழும் பூமியில் நான் எப்படி வெளியில் வந்து உலாவலாம்?

மேலும், நாட்டுக்கு நாடு, இனத்துக்கினம் மதத்துக்கு மதம், மொழிக்கு மொழி இவர்கள் சண்டைபோடுவதால் இந்தச் சிறிய பூமியில் பிணவாடை வீசுகிறது, இரத்த நெடி மூக்கைத் துளைக்கிறது. இவ்வளவு அழுக்கான பூமியில் நான் கால் வைக்க முடியாமல் மறைந்து திரிகிறேன். எனது அடியார்கள் (சிலர்) அவர்கள் உள்ளங்களில் குடி இருக்கிறேன். அணுவாக நின்று ஆடுகிறேன் என்பதை நீ அறிவாய். சில வல்லரசுகளின் கிடங்குகளில் மடங்கிக் கிடக்கிறேன்.

எனக்கு கோபம் கோபமாக வருகிறது. நினைத்தால் ஒரு நொடிப் போதில் இவர்களை அழிப்பேன். பொறுங்கள். பொறுங்கள் என்று அருட் 'சக்தியான உமையவள் தடுக்கிறாள், பொறுத்தேன். ஆனால் பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா என்றவர், சடுதியாக மறைந்தார். எனது சாட்சியை நம்புகிறீர்களா?

**ஆண்டவன் அழிவு செய்தால்**
**ஆரதைத் தடுக்க வல்லார்?**

# வெள்ளைச் சந்நியாசிகள் நால்வர் (உண்மைச் சம்பவம்)

இந்து சமயதத்துவங்களால் கவரப்பட்டு, கிறீஸ்த சமயத்தைத் துறந்து, சந்நியாசிகளாய் மாறிய நான்கு வெள்ளைச் சாமிகளை தற்செயலாக சந்தித்து அவர்களோடு உரையாடிய வரலாற்றின் சுருக்கத்தை இங்கே தருகிறேன்,

காலஞ் சென்ற இலங்கைத் தேசாதிபதியின் மூத்த மகன் ரூம்ஸ் பொதாம் சோல்பரி (M, A oxen) அவர்களும், அவருடன் ஆனைக்குட்டி சாமியார் என அழைக்கப் பட்ட ஜேர்மன் சாமியாரும், ஒரு அவுஸ்திரேலிய சாமியாரும், சின்னச் சாமியார் என அழைக்கப் பட்ட ஒரு ஜேர்மானிய இளம் வயதுச் சாமியாரும் ஆகிய நால்வரும், ஒரு நாள் நயினை நாக பூஷணி அம்பாள் ஆலய தரிசனம் செய்து விட்டு ஒரு படகில் ஊர்காவல் துறையை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தனர்.

காவி வஸ்திரம் தரித்து காலணியு மின்றி, விபூதியும் சந்தனப் பொட்டும் இட்டு, சிவனடியார்கள் போல் காட்சியளித்த அவர்கள் திருக்கோலத்தைக் காண நேர்ந்தது என்பாக்கியமாக எண்ணினேன். மத்தியான வேளை கொளுத்தும் வெயிலில் தலைக் கவசம் இல்லாமல் இருந்ததைக் கண்டு வருந்தி, என் கையில் இருந்த குடையை விரித்து சோல்பரிச் சாமிக்கு மேல் பிடித்தேன், அவர் நன்றி கூறி, தனக்கு வெயில் சுடவில்லை என்றும் என்னையே பிடிக்கு மாறும் கூறித் தடுத்தார். தாகமாயிருப் பார்கள் என்று எண்ணி நாலு சோடாப் போத்தல்களை வாங்கி அவர்கள் முன் வைத்தேன் அதையும் அவர்கள் மறுத்தனர். என் கட்டாயத்தின் பேரில் ஒரு போத்தலைத் திறந்து கொடுக்க அவர்கள் நால்வரும் சிறிது அருந்தி என்னையே மிகுதியைக் குடிக்கும் படி சொன்னார்கள்.

படகு ஓடிக் கொண்டிருந்தது அவர்கள் நால்வரும். சித்தாந்த சாஸ்திரங்களை பேசி, பின்பு அரசியல் பேசினர், அப்போது, ஜேர்மனியாரான சின்னச் சாமிகள், கிட்லரைக் கண்டனம் செய்து, அவன் மகா பாவி என்றும் கொலைகாரன் என்றும் வர்ணித்தார். அப்போது அருகிலிருந்த நான், சாமி! கண்டனம் செய்யாதீர். கிட்லர் என் அபிமான வீரன், உலக ரட்சகன்'' என்று கூறி, நீங்கள் பாரதம் படித்திர்களா?'' என்று கேட்க, ஆம் என்ருர் அவர், அப்படியானல் மகா பாரதத்தை நடத்தியவர் யார் என்றேன். லோட் கிருஷ்ணு தான் என்ருர். அப்படியானல், கிட்னர் கொலைகாரனு,? பாதகனு? எனகேள்வி எழுப்பினேன். அவர் மவுனம் என்னைப் பேச வைத்தது.

''சாமி! கிதையில் கிட்னர் பரமாத்மா, அருச்சுனனுக்குச் சொன்ன வார்த்தைகளை நம்புகிறீர்களா?'' என்று சொல்லி விட்டு, கிதை உபதேசத்தை When Virtue is at an end and, evil predominates, I shall be born in this world to help mankind'' என்ற வாக்கியதனைதக் கூறினேன். அவர்கள் முகம் மலர்ந்து தலையசைத்தனர். அதன் பின்னர்.

1939 ம் ஆண்டு இரண்டாம் உலகயுத்தம் தொடங்கிய போது, உலகம் இருந்த கேவல நிலையை வருணித்தேன் அன்று ஏகாதிபத்திய வல்ல சுகள் நூற்றுக்கும் மேற்பட்ட சுதேச நாடுகளைத் துப்பாக்கி முனையில் வென்று, அடிமைப் படுத்திச், சுதேசிகளைக் கொன்று அவர்கள் நாட்டைச் சூறையாடிய வரலாறுகளை எடுத்துச் சொன்னேன். அத்தோடு திலகர்,காந்தி முதலிய விடுதலை வீரர்களைக் கொடுமைப் படுத்தியதையும், பல்லாயிரம் அப்பாவி இந்திய மக்களைப் பிரிட்டிசார் சுட்டுக் கொன்றதையும் கூறினேன். இன்னும் பல ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகள், தாங்கள் துப்பாக்கி முனையில் கைப்பற்றிய ஆபிரிக்க சுதேசிகளைக் கொடுமைப் படுத்தியதையும் கூறினேன். இதனல் தான் கீதையில் கூறிய பிரகாரம் கிட்னர் ஜேர்மனியில் கிட்லராக அவதரித்தார். மேலும் கிட்லர், கிட்னர் என்ற இரண்டு பெயர்களின் ஒற்றுமையையும் விளக்கினேன். இரண்டு பெயர்களுக்கும் இடையில் உள்ள லகர, னகர பேதங்களைப் போலி என்பதை

யும் உ.தாரணங் காட்டி விளங்க வைத்தேன். மேல் மாடி என்பதை மேன்மாடி என்றும் சொல் மாலே என்பதை சொன் மாலே என்றும் வாசித்தும் ஒருமைப் பாட்டைச் சொன்னேன் மேலும் சுவாமிகாள்! கிட்லர் என்பவர், முற்பிறப்பில் இந்தியாவில் தமிழ் நாட்டில் கிட்னராகப் பிறந்து. ஆயர் பாடியில் வளர்ந்து, மகா பாரதப் போரை நடாத்திய பரமாத்மா தான் என்பதை வலியுறுத்தினேன்.

1939 ல் மியூனிச் நகரில் கிட்லர் நிகழ்த்திய யுத்தப் பிரகடனம் அவருக்கு இந்தியாவில் இருந்த பற்றுக்கு எடுத்துக் காட்டாக உள்ளது என்பதையும் தெரிவித்து, அவர் பேசிய பேச்சின் சாரத்தை கூறினேன். அவர் பேசியது இதோ:-

"ஓ பிரித்தானியாவே! நீ அடிமைப்படுத்தி வைத்ரு திக்கும் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கு; வழங்கினல், நான் என் தொப்பியை எடுத்து, சல்யூட் அடித்து இந்த யுத்தப் பிரகடனத்தை வாபசாக்குவேன்" என்ருர் கிட்லர். பிறிட்டன் அதற்கு இணங்கவில்லே, என்வே யுத்தம் மூண்டது 7 வருடங்கள் கடந்தன.

## விடுதலே கிடைத்தது யாரால்?

1945 ல் இரண்டாம் உலக யுத்தம் முடிந்தது. உலக நாடுகளே அடிமைப்படுத்திய ஏகாதி பத்தியத்தின் முது கெலும்பு முறிந்தது. கடற்படைக்கப்பல்கள் பல பாதாளம் போயின, ஆயிரக் கணக்கான ஆகாய விமானங்கள் தரைப் படைகள் நாசமாயின ஐந்து கோடி மக்கள் கொல்லப் பட்டும், மேலும் 5. கோடிக்கு மேல் காயப் பட்டும் போ யினர். ஐம்பதாயிரம் கோடி டொலர் பெறுமதியான பொருட்கள் நாசமாயின. உலக வல்லரசான பிரித்தானியா என்ற சிங்கம் முது கெலும்பு ஒடிந்து, பல்லுடைந்து கிடந்தது. 1945 ல் கிட்லர் மறைந்தார். எப்படி மறைந் தார் அவர் என்பது யாருக்கும் தெரியாது. இந்தியா உட்பட அறுபதுக்கு மேற்பட்ட அடிமை நாடுகள் விடுதலே அடைந்

தன. இது இப்படி இருக்க சில விடுதலை இயக்கங்கள் தங்களால் தான் சுதந்திரம் கிடைத்ததென்று கூப்பாடு போடுகின்றன. இயக்கங்களில் சேர்ந்திருந்த வயோதிபருக்கும் மாலை அணிவிக்கின்றனர். இந்த கண்ருவிக் காட்சிகளை இன்று இந்தியாவில் காண முடிகிறது. ஆனுலும், திலகர், காந்தி முதலிய பெருந்தலைவர்கள் விடுதலை ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியதும், பல லட்சம் அப்பாவி மக்கள் பலி ஆனதும் உண்மை தான். ஆனுல் விடுதலை வந்தது காக்கை இருக்கப் பனம்பழம் விழுந்த மாதிரி தான். காகதாலியம் என்பது இது தான்.

கிட்லபரமாத்மா பிறந்திராவிட்டால், உலகில் விடுதலை என்பது கனவாகத் தான் இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

## நெடும்பதி நலம்பெற.
### (ஆசிரியப்பா)

சரித்திரம் படைத்த தனிநெடுந்தீவி ல்
குடி நீரின்றிக் குடிகள் வெளி யேறி
திக்கெட்டும் செல்ல தீவு வெறுமையாய்
காட்சியளிக்க காணுங் கவலையால்
உற்றது சொல்வேன் உண்மையும் இது தான்

காலங் காலமாய்க் காற்றும் மழையும்
கவின் பெறு மண்ணைக் கவரக்கடல் நீர்
உட்புகுந் தூறி உள்ள நீர் கெட்டு
முன்குளக் கோட்டன் வெட்டிய குளங்கள்
நன்செய் புன் செய் நிலங் களராகப்
பசுத் தீவென்று ஒல்லாந்தர் போற்றிய
நெடுந்தீவின்று நிர்க்கதி யானது அதனுல்,

பெய்யும் மழை நீர் வெளியேருதிருக்க
வைகும் கடல் நீர் வாரா திருக்க
விஞ்ஞான முறையில் மதில் அமைப்பதுவே
தக்கது என்று சரித்திரம் சொல்லும்.

ஒல்லாந்து நாட்டில் நெதர்லாந் தென்னும்
கடல் மட்டத்தின் கீழ்ப் படும் உவர் நிலம்,
முந்நூற்றைம்பது மைல் நீளத்தைக்
கடற் சுவர் எழுப்பி வடகடலைத் தடுத்துக்
களர் படு நிலத்தை வளம் பெறவைத்த
ஒல்லாந்தியர் போல் தொல் நெடுந்தீவிலும்
கல் மதில் எழுப்பித் கடலைத் தடுக்கத்
தொல் புகழ் பசுத் தீவு பழமை போல்
நல் வளம் பெற்று நலிவெலாம் நீங்கி
நன் செய் புன் செய் பண்டு போல் செழிக்க
பால் படு பண்ணைகள் பனம் பொருட் பண்ணைகள்
மீன் பிடி பண்ணைகள் நிறையவும் தோன்றி
வான் படு செல்வம் வளங்கள் செழிக்க
பொருளாதாரம் பெருகும்; மதிலைப்
போடும் பணியைப் புரிவீர்
பாரை ஆளும் பெரு மாண்பினரே! (ஆ-ர்)

## ஈழக் கண்ணோட்டம்

### கும்மி

1. ஈழக் கடற்கரை சுற்றிவா – ஏக்கர்
எத்தனை லட்சம் களர் நிலம்
பாழாய்க் கிடக்குது பாரையா -இதை
பயன்பெறச் செய்வது யாரையா

2. நாற்பது லட்சம் தமிழினம் – சொற்ப
நாளில் பல மடங்காய் விடும்
காப்பது நம்மையே நாங்கள் தான் - இதில்
கவனம் கொளாமையே தீங்கு தான்.

3. பொருளாதாரம் வளம் பெற - தமிழ்
பெருங்குடி மக்கள் நலம் பெற
பெருமை சேர் ஈழம் பொலிவுற - தமிழ்
பாடும் என் புன்கவி பேணுவீர். (ஆ-ர்)

# சிவஞானபோத அத்துவித சைவ சித்தாந்தம்

இறைவன், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருளின் உண்மையை விளக்குவது சைவசித்தாந்தம் என்பர். இது 13 ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் வாழ்ந்த மெய் கண்ட தேவரால் அருளப்பட்டது. 12 சூத்திரங்களைக் கொண்டது. எந்த ஒரு காரியத்திற்கும் காரணம் உண்டு. நாம் காணும் பிரபஞ்ச தோற்றத்துக்கு ஒரு நிமித்த காரணம் உண்டு. அதுதான் இறைவன். அதற்குத் துணைக் காரணம் இறைவனது அருட்சக்தியாகும். இதற்குத் திரோதான சக்தி என்றும் பெயர். நிமித்த காரணம் இறைவன். துணைக் காரணம் சக்தி; முதற் காரணம் மாயை. இவை மூன்றும் பிரபஞ்ச உற்பத்திக் காரணங்கள் ஆகும்.

பிரபஞ்சம் இயற்கையால் ஆனது, கடவுள் என்று வேறு இல்லை என்பதை மறுத்து ஆதாரங்கள் காட்டி கடவுள் ஒருவனே பிரபஞ்சத்துக்கு காரணம் என்று விளக்கு கிறார் தேவர். மேலும் இறைவன் அனாதி என்றும் ஆன்ம கோடிகளும் அனாதி என்றும் சொல்கிறார். ஆன்மாக்கள் எண்ணிறந்தன, அழியாதவை. இயல்பாகவே ஆணவம் கன்மம், மாயை என்ற மூன்று வகையான மலங்களால் பீடிக்கப்பட்டவை. இறைவனே ஆன்மாக்களோடு ஒன்றா யும், வேறாயும், உடனாயும் நின்று அருட்சத்தியான திரோ தான சக்தியால் ஆன்மாக்கட்கு மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் காரணங்களையும் கொடுத்து ஆன்மாக்களின் வாழ்வுக்காக தனுகரண புவன போகங் களையும் கொடுத்து அருள் செய்கிறான் என்பர்,

மேலும் ஆன்மாக்கள் இல்லை என்பதை மறுத்து ஆன்மா உண்டு என்பதைப் பல ஆதாரங்களோடும் நிரூபிக் கிறார் தேவர். ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகட்கு கேற்பப் பல பிறவிகளை எடுக்கின்றன என்று சொல்லப்படு கிறது.

பகுத்தறிவுள்ள மானிடப்பிறவியின் நோக்கம் முத்தி பெறுவது தான். தன்னையறிந்து இறைவனை இடைவிடாது பக்திசெய்து இறைவன் அருளால் தான் ஆன்மாக்கள் முத்தியின்பம் அடைய வேண்டும், வேறு வழியில்லை. இதற்கு நான்கு மார்க்கங்கள் கூறப்படுகின்றன. அவை சரியை,, கிரியை. யோகம், ஞானம் என்பனவாகும். அவற்றைச் சிவஞானபோதம் விரிவாகத் தருகிறது.

படைத்தல் காத்தல்களைப் பிரமா விட்டுணுக்கள் சிவனின் ஆணைவழி செய்துவரினும் (அழித்தலை) அதாவது பிரபஞ்ச ஒடுக்கத்தைச் செய்பவர் சிவபெருமானேயாகும். நித்திய பஞ்சகிருத்தியம் எப்பொழுதும் நடக்கிறது. மகா பஞ்சகிருத்தியம் மகா சங்காரகலத்தில் நிகழும். அதன்பின் பரிபக்குவம் அடையாத ஆன்மாக்களின் பொருட்டுப் பிர, பஞ்சம் மீண்டும்தோன்றும். "திருநடனம் மீண்டும் நடக்கும்'

பஞ்சகிருத்தியம் நிகழ்கின்றது. நடராசவடிவில் அப் பஞ்சகிருத்தியம் புலப்படுமாற்றைத்

**தோற்றம் துடியதனில் தோயும் நிதி அமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி**
**நாகன்ற மலர்ப் பதத்தே நாடு."**

என உண்மை விளக்கம் எடுத்துரைக்கின்றது. சிவனுடைய உடுக்கில் எழும்பும் ஓங்காரநாதத்தில் படைத்தல், அமைந்த அபயகரத்தில் காத்தல், அக்கினியில் அழித்தல், ஊன்றிய திருவடியில் மறைத்தல், தூக்கிய திருவடியில் அருளல் ஆகிய ஐந்துவகை அபிநயங்களும் காணப்படுகின்றன.

இந்த நிகழ்வுகளின் பயன்களை வரும் வெண்பாவில் காண்க;

மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதில் ஆன்மாவைத் தானழுத்தல்
தான் எந்தை யார் பாதம் தான்."

இதன் பொருள் வருமாறு: மாயை நீங்கப் பெற்று ஒடும் பொன்னும் சரிஎன்ற இருவினை ஒப்புண்டாகி, ஆணவம் கெட்டு ஆன்மா சுத்தமடைய, அது பேரின்ப வாழ்வை அடையுமாறு சிவபெருமான் செய்கின்றார் என்பது.

அணு இருகூறாகி ஆடுவதால் பஞ்சகிருத்தியம் நிகழ்கிறதென்பது முன்னர் கூறப்பட்டது. இதனை இக்காலத்து விஞ்ஞான மேதைகள் கண்டுவிட்டனர். ஆனால் இதனை எண்ணூறு ஆண்டுகளின் முன்னிருந்த மனவாசகங்கடந்தார் மிகத் தெளிவாக சிவபெருமானின் அபிநயங்களோடு அவரின் நடனத்தால் வரும் பயன்களையும் கூறுவதின் மேன்மைதான் என்னே! சிவபெருமானின் திரு உருவத்தை ஐந்தெழுத்தால் காட்டும் அற்புதமும் ஐந்தெழுத்தைத் தினம் ஓதுவதால் வரும் பேறுகளையும் சித்தாந்த சாஸ்திரத்தில் காணமுடிகிறது.

## கந்தபுராணம்

கந்தபுராணம் ஒரு அருமையான சைவநூல். இதனை இயற்றியவர் கச்சியப்ப சிவாச்சாரியார். இது பதினெண் புராணங்களில் மேலானது. மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞானபோத உண்மைகட்கு உருவடிவம் கொடுத்து சாதாரண மக்களும் சைவசமய மேன்மையை அறியவைப்பது கந்தபுராணம்,

இதன் மாண்பினை அறிந்த பரசமயகோளரி ஆகிய நல்லை நாவலர் பெருமான் தமிழக தேவஸ்தானங்களில் கந்தபுராணம் படித்துப் பயன்பெற வேண்டும் எனப்பணித்து அதனை சாதனை செய்து காட்டினார்கள்.

கடவுள், ஆன்மா, பாசம் மூன்றையும் விவரிக்கிறது சிவஞானபோதம். அதற்கு உருவ வடிவங் கொடுக்கிறது கந்தபுராணம். ஆணவத்தின் சுயரூபமாய் வருகிறான் சூரபத்மன், கன்மத்தின் வடிவம் சிங்கன். மாயையின் வடிவம் தாருகன். ஆன்மாக்கள் மூன்றுவகை அவை பிரளயாகலர், விஞ்ஞானகலர், சகலர் என்பன. சகலர் சாதாரண மானிட ஆன்மாக்கள், மும்மலங்களாலும் பீடிக்கப்பட்டவர்கள். பிரளையாகலர் என்னும் வர்க்கத்தில் உள்ள பிறவிகள். மாயை நீங்கலாக ஏனைய கன்மம், ஆணவம் இவற்றால் பீடிக்கப்பட்டவை. விஞ்ஞானகலர் தேவ ஆன்மாக்கள். இவை ஆணவம் ஒன்றால்மட்டும் சிறைப்படுத்தப்பட்டு விடுகின்றன. மனித ஆன்மா மும்மலங்களாலும், ஐம்புலன்களாகிய வேடர்களாலும் சிறைப்பட்டிருக்கிறது. தேவர்களையும் மனிதர்களையும்சிறைமீட்க இறைவன் வருகிறான். அவன் தான் கந்தன் முருகன், மீட்பன்.

தெய்வயானை அம்மன் திருமணப்படலம், கந்தப்பெருமான் தேவ ஆன்மாவைச் சிறைமீட்டு ஆட்கொள்வதைக் காட்டுகிறது. வள்ளிஅம்மன் திருமணப்படலம் மனித ஆன்மாக்களின் சிறை மீட்பைக் காட்டுகிறது.

இந்தத் திருமணங்கள் பேரின்பத் திருமணங்களின்றி சிற்றின்பத் திருமணங்கள் அல்ல. முருகனுக்கு இரண்டு மனைவியரும் அல்ல. இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாக்களைத் தலைவியராகவும் கூறுவது தமிழ் இலக்கிய மரபு.

எத்துணைப் பெருந் தவத்தினராயினும் அதனால் பெறற்கரும் பெரும் பேறுகளைப் பெற்றவராயினும் நிலையில்லாத இன்பங்களை வெறுத்து நான் எனது என்ற வீண்எண்ணங்களை நீக்கி அறவழி, அருள்வழி நின்று தாங்கள் விடும் தவறுகளுக்காக வருந்தி முருகன் தாளே சரணம் என்றுதவர்களுக்கு ஆன்மஈடேற்றம் இல்லை என்பதைக் கந்தபுராணம் காட்டுகிறது. இறைவன் ஆன்மாக்களை மீட்கும்பணியில் அவைகளோடு ஒன்றாகவும், உடனாகவும், வேறாகவும் நின்றுஅருள் பொழிகிறான் என்பது தெளிவாகிறது. எனவே மெய்கண்டார் அருளிய சுத்த அத்துவித தத்துவங்களையே கந்தபுராணமும் கூறுகின்றது. சுவையுடன் கூறுகின்றது

மேலும் மேன்மைகொள் சைவ நீதிகளை ஆட்சேபிக்கும் மக்கட்குச் சைவத்தின் சிறப்புக்களைத் தெளிவாக எடுத்துக் கூறும் ததீசி உத்தரப் படலம் குறிப்பிடத்தக்கது.

வெறுந் தவத்தினால் சடயோக சித்திகள் பெற்று இறைவனருள் இன்றி சிவநிந்தனை செய்யும் அறிவிலிகள் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்வர் என்ற கருத்தமைந்த தாருகாவனத்திருடிகள் பட்ட அவலங்களையும் கந்தபுராணம் கூறுகிறது. தவிர

அண்ட கோசப்படலம் பதினான்கு லோகங்களிலும் உயிரினம் உண்டு எனக்கூறுகிறது. இது இக்கால விஞ்ஞான மேதைகளின் ஆய்வுகளைத் தூண்டும் வண்ணம் அமைகின்றது. மேலும்

கச்சியப்பசுவாமிகளின் இனிய இலக்கியச்சொல்லோவியம் தெவிட்டாத தன்மை உள்ளது. அத்துவிதசித்தாந்தக் கருத்துக்களை இனிய செந்தமிழில் சொல்ல கல்வியால் உயர்ந்த கம்பனாலும் முடியுமோ என்பது ஐயமே.

## சமரச சன்மார்க்கம்

சமயங்கள் கோடி. ஆதியில் பூமியின் பலபாகங்களிலும் தோன்றிய மனிதகுலம் ஆடை இன்றி மொழியின்றி அலைந்து திரிந்து பின்பரிணம வளர்ச்சியின் பயனாக சிந்திக்கும் மனிதராக வளர்ந்து தமக்கொரு மொழியும் மார்க்கமும் கண்டு சமூகங்களாகமாறி இனங்களாகித் தமக்கென ஒரு நாடும் பெற்று பழக்க வழக்கங்களின் அடிப்படையில் சில ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருகிறது.

சூழ்நிலையாலும் சுவாத்திய மாறுபாட்டாலும் நிற வேறுபாடுள்ள மனிதகுலம் வெவ்வேறு சமயங்களை உண்டாக்கித் தத்தம் சமயமே மேலானதென்றும் தங்கள் கொள்

கையே சரியென்று வாதிடத் தொடங்கி முரண்பட்டு வன் செயல்களில் இறங்கி கொலை, பாதகங்களை செய்தனர் செய்கின்றனர். இறைவன் ஒருவனே உலகத் தோற்றத்துக் கெல்லாம் காரணம் என்பதை அறியாது மயங்குகின்றனர். யாவரும் இறைவனின் மக்கள் என்பதை மதிக்கத் தவறு கின்றனர். இவர்களின் மயக்கம் தெளிய மருந்து கண்டறிய வேண்டும். இந்த மருந்தின் பெயரே "சமரச சன்மார்க்க மாகும்".

சமயங்கள் மொழியால், இனத்தால், நிறத்தால், கோலத்தால், கொள்கையால் வேறுபட்டாலும் அவை யாவும் அடிப்படையில் உண்மையை, அன்பை, அகிம்சையை பொறுமையை வலியுறுத்துகின்றன. இவற்றின் மூலம் சமரச சன்மார்க்கம் வளர வாய்ப்புண்டு. இதுவே இக்கால உல கின் இன்னல்களுக்கு ஏற்ற சமயசஞ்சீவி, பெருமருந்து.

பலமதங்களிலும் இந்தப் பெருமருந்தை பற்றி அறிந் தவர் மிகச்சிலரே. அவர்களுக்குச் சாதிமத வேறுபாடுகள் இல்லை. கற்றவர்க்கு சாதியில்லை கடந்தோர்க்குச் சமயம் (மதம்) இல்லை என்பது உலக வழக்கு. சமரச ஞானமே, அவர்கள் சமயம் மதப்பித்தில்லாமல் இறைபித்துள்ளவர்கள். மக்கள் சேவையே மகேஸ்வர சேவை என்ற மனப்பாங்குள் ளவர்கள். சகலமதங்களிலும் அவர்கள் மிளிர்வதைக் காண லாம். அவர்கள் பட்டியல் நீளமானது. மகாகவி பாரதி இக்பால், குணங்குடி மஸ்தான் சுவாமிகள், இராமலிங்க அடிகள், ஸ்ரீ இராம கிஷ்ணர், அன்னை சாரதாமணிதேவி யார், அன்னை திரேசா, செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் அக்பர் நீதியரசர் அவர்கள் காந்திஜி, நேரு போன்றவர்கள், சேர்அன்றூ அவர்கள், போப்ஐயர் அவர்கள் சங்கைக்குரிய கிங்ஸ்பறி போதகர், சுவாமி விவேகனந்தர் முதலியோர் சமரச சன்மார்க்க சீலர்கள் ஆவர். இவர்க ளைப் போன்று இன்னும் சில ஆயிரம் பேர் உலகில் இருப்

பார்களேயாஞல் சாந்தி நிலவும், சமரச சன்மார்க்கம் பரவும், மதப்போர்கள் நீங்கும் உலகசமாதானம் உதயமாகும் என்பதில் ஐயமே இல்லே. நாடுபிடி சண்டைகள் முதலியன அகலும், வையகம் ஒரு சுவர்க்க பூமியாக மாறும் என்பதில் ஐயமே இல்லே.

மேற்கூறிய ஞானிகள் தங்கள் சமய ஒழுக்கங்கட்கு அமைய வாழ்ந்த அதே வேளேயில் மக்கள் சேவையே பெரிதென செய்து வாழ்ந்தவர்கள். மற்றவர் மதங்கட்கும் மதிப்புக் கொடுத்தவர்கள்.

வாழ்க சமரச ஞானம்!
வாழ்க உலக சமாதான!ம்

அன்பர் பணி செய்ய எனே
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலே தானே வந்து
எய்தும் பராபரமே!

(தாயுமானுர்)



கே

கோ கோ